# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (09-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:346


## இடைக்கால வரைவை எதிர்த்து போராட்டம் நடத்த பிக்குகள் முடிவு!

### 12ஆம் திகதி கண்டியில் 10ஆயிரம் பேரை திரட்டவும் தீர்மானம்

கொழும்பு,நவ.9

வடக்கு - கிழக்கில் இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளால் இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'இடைக்கால தன்னாட்சி அதிகார சபை' வரைவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்க பிக்குகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்காக 10 ஆயிரம் பிக்குகளைத் திரட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டில் உள்ள சகல நிக்காயாக்களின் பிரதிநிதிகளும் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி மாலை 4 மணிக்கு கண்டி தலதா மாளிகைக்கு முன்பாகக் கூடி இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும் பிக்குகள் முடிவு செய்துள்ளனர்.

எதிர்ப்பு நடவடிக்கையின்போது புலிகளின் வரைவுக்கு எதிரான தமது எதிர்ப்பை அவர்கள் வெளியிடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் வரைவைத் தீயிட்டுக் கொளுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-3)

## நோர்வே சமாதானக் குழுவினர் திட்டமிட்டபடி இலங்கை வருவர்

### தமிழ்ச்செல்வனையும் சந்திப்பர்

கொழும்பு,நவ.9

தெற்கில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் சூழ்நிலையிலும் சமாதான முயற்சிகளை எந்தவகையில் முன்னெடுப்பது என்பது குறித்து நோர்வே சமாதானக் குழு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தவிருக்கின்றது.

கொழும்பில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளபோதும் நோர்வே சமாதானக் குழுவின் தலைவரான விடர் ஹெல்கிஸன், ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் திட்டமிட்டபடி நாளை கொழும்பு வருகின்றனர்.

இலங்கையில் தற்சமயம் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் எவ்வாறு சமாதான முயற்சிகளை முன் நகர்த்துவது என்பது குறித்து அவர்கள் அரசு மற்றும் புலிகளுடன் ஆராய்வார்கள்.

கொழும்பில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடனும் மற்றும் அரச தரப்பினருடனும் அவர்கள் பேச்சு நடத்துவர்.

ஜனாதிபதியை இவர்கள் சந்திப்பது குறித்து முடிவேதும் (18ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றை உடன் கூட்டி, பறித்த அமைச்சுகளை மீள ஒப்படைத்தால் தேசிய அரசு பற்றி பரிசீலிப்போம்!

## ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஐ.தே.முன்னணி அரசின் பதில் இது!

கொழும்பு,நவம்பர்9

**தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இரு வாரங்களுக்கு ஒத்தி வைத்துள்ள நாடாளுமன்றத்தை உடனடியாக மீண்டும் கூட்டவேண்டும். அவர் தன் வசம் எடுத்துக்கொண்ட பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களை மீண்டும் அரசிடம் ஒப்படைக்கவேண்டும். இவற்றை ஜனாதிபதி உடன் நடைமுறைப்படுத்தினால் அவர் அழைப்பு விடுத்த தேசிய நல்லிணக்க அரசில் பங்கேற்பது குறித்துப் பரிசீலனை செய்யலாம் என ஐக்கிய தேசிய முன்னணி அரசு தெரிவித்துள்ளது.**

புத்தசாசன அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார கொழும்பில் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க தான் எடுத்து வரும் முயற்சியில் இணைய வருமாறு அனைத்து தேசிய மற்றும் தேசாபிமான சக்திகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. உயர்மட்டம் நாளை கூடி அரசியல் நிலைமை பற்றி ஆராயும்

### முக்கிய முடிவுகள் எட்டப்படலாம்

கொழும்பு,நவ.9

தெற்கில் தற்போது உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய ஐ.தே.கட்சியின் உயர் பீடம் நாளை திங்கட்கிழமை மாலை கட்சியின் தலைமையகத்தில் கூட இருக்கின்றது.

கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடும் உயர்பீடம் முக்கிய சில முடிவுகளை எடுக்கும் என்று கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயம், கட்சியின் நாடாளுமன்றக் குழு நாளை காலை அலரி மாளிகையில் கூடி தற்போதைய நிலையை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயும்.

அங்கு எடுக்கப்படும் முடிவுகள் மாலை நடக்கும் உயர்மட்டக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இறுதியாக்கப்படும் என்றும் அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் பெரும்பாலான உயர்மட்ட உறுப்பினர்கள் ஜனாதி (18ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கு அரசியல் நெருக்கடி பற்றி புலிகளுக்கு நோர்வே விளக்கம்

தெற்கில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடி குறித்து அவ்வப்போது விடுதலைப் புலிகளின் தலைமைக்கு நோர்வே தரப்பினர் விளக்கம் அளித்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப் புலிகளின் வரைவு கடந்த 31ஆம் திகதி நோர்வேத் தரப்பு ஊடாக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரைவு தொடர்பாக இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சை ஆரம் (18ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் பிரதி அமைச்சு பதவிகளை அரசிடம் கையளிப்பதற்கு ஜனாதிபதி யோசனை

### ஆனால் ஐ.தே.க. தலைமைப்பீடம் அதனை நிராகரித்தது

கொழும்பு,நவ.9

ஜனாதிபதி தம்வசம் எடுத்துள்ள பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களின் பிரதி அமைச்சுப் பதவிகளை அரசிடம் கையளிக்க அவர் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார். அந்த யோசனையை ஐ.தே.கட்சி தலைமைப்பீடம் நிராகரித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தமது சில தொடர்பாளர்கள் மூலம் அரசுடன் தொடர்புகொண்டுள்ளார்.

ந்தொடர்பாளர்கள் மூலமே இந்த யோசனையை அவ முன்வைத்தார்:

"தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை சரிவர முன்னெடுத்துச் செல்வதற்கு, பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்கள் அரசின் வசமே இருக்கவேண்டும். அந்த அமைச்சுக்கள் ஜனாதிபதி வசம் இருக்கும்போது சமாதான முயற்சி தடைப்படக்கூடிய சூழ்நிலையே ஏற்படும்.



"ஆகவே பிரதி அமைச்சுப் பதவிகளைக் கையளிக்கும் ஜனாதிபதியின் யோசனையை நிராகரித்துள்ளோம்" - என்றார் அவர்.

## புலிகளின் நிலைப்பாடு உடனடியாக தெரியாது

தெற்கில் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு உடன் வெளியிடப்படமாட்டாது என்று அந்த அமைப்பின் ஊடகப் பொறுப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

இந்த நெருக்கடி தொடர்பாக தலைமைப்பீடம் அடிக்கடி கூடி ஆராய்ந்து வருகிறது என்றும் மாறிவரும் நிலைமையை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு செய்தி நிறுவனங்களுக்கு புலிகளின் பிரமுகர்கள் பேட்டி அளிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (ம-3)

## மின்னல் தாக்கி சிறுவன் மரணம்!

மட்டக்களப்பு குருமண்வெளியில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி சிறுவன் ஒருவன் உடல் கருகிப் பலியானான். அதே இடத்தைச் சேர்ந்த ரமேஷ் அனோஜன் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

பிரஸ்தாப சிறுவன் வயல் வெளியில் நின்ற சமயமே மின்னல் தாக்குதலுக்கு இலக்கானதாக சிறுவனின் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவதில் தமிழ்க் காங்கிரஸ் என்றும் பின்னிற்காது!

### கட்சித் தலைவர் விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவதில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்றைக்குமே பின்னிற்காது என்று தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 102ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் எமது கட்சியைப் பலப்படுத்துகின்றோம் என்றால் அது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதற்குத்தான்.

இதனை எமது மக்கள் மறந்து (18ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம் நேற்று பிரதமருடன் பேச்சு

கொழும்பு,நவ.9

தெற்கில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்திருப்பது குறித்தும் மூன்று அமைச்சர்களிடமிருந்து அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டிருப்பது குறித்தும் இரு தலைவர்களும் முக்கியமாக ஆராய்ந்ததாகத் (18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஈராக்கில் தன்னுடைய அலுவலகங்களை மூடுகிறது

## பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணம்

ஈராக்கில் தனது பணியாளர்களின உயிருக்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருந்து வருவதனால், அங்குள்ள தனது அலுவலகங்களை தற்காலிகமாக மூடி, உதவிப் பணிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தீர்மானித்துள்ளது.

தலைநகர் பக்தாத் மற்றும் ஈராக்கின் தெற்கு நகரான பஸ்ரா ஆகியவற்றில் தமது பணியாளர்கள் பெரும அச்சுறுத்தலை எதிர்நோக்கி இருப்பதனாலும், அங்கு வன்முறை நிறைந்த சூழ்நிலை இருப்பதனாலும், அங்குள்ள அலுவலகங்களை மூடிவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் புளோரின் வெஸ்ட்பால் தெரிவித்தார்.

கடந்த மாதம் பக்தாத்தில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்தின் முன்பாக நடத்தப்பட்ட கார் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் 140 வருட வரலாற்றில் அதன் பணியாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட முதல் தாக்குதல் இதுவாகும்.



இதனை அடுத்தே தனது பணியாளர்களுக்கு பக்தாத்தில் பெரும் உயிராபத்து இருக்கின்றது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உணர ஆரம்பித்தது. அதன் பின்னர் தொடர்ந்தும் ஈராக்கில் வெளிநாட்டு உதவிப் பணியாளர்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. தமது பணியாளர்களுக்கும் ஆபத்துத் தொடர்கின்றது என்பதனால் அங்குள்ள அலுவலகங்களை மூடி விடுவதற்கு இப்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தீர்மானித்துள்ளது.

ஈராக்கில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நேரடியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவில்லை என்றாலும், அங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று குழுவின் பேச்சாளர் மேலும் சொன்னார்.

ஈராக்கில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சார்பில் 30 வெளிநாட்டு அலுவலர்களும் 600 ஈராக்கியர்களும் பணியாற்றி வருகின்றனர். "எமது வெளிநாட்டுப் பணியாளர்களை என்ன செய்வது என்பது குறித்து நாம் தொடர்ந்தும் சிந்தித்து வருகின்றோம்" - என்றார் புளோரின் வெஸ்ட்பால்.

## இஸ்ரேலின் தாக்குதலில் 3 பலஸ்தீனர் பலி!

ஜெருசலேம்,நவ.9

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையிலான மோதல்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. நேற்றும் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட 3பேர் பலியாகினார்கள்.

காஸாவில் இஸ்ரேல் - பலஸ்தீன எல்லையில் வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலியர்கள் மீது பலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்தினார்கள். அதற்குப் பதிலடியாகவே இஸ்ரேலியர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரிவிககப்பட்டது.

## அமெரிக்க மிஷனறிகள் மூடப்பட்டன

சவூதி அரேபியாவில் உள்ள அமெரிக்கர்களை இலக்கு வைத்து அல்கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் தீவிரமடைந்திருப்பதன் காரணமாக அங்குள்ள அமெரிக்க மிஷனறிகள் மூடப்பட்டுள்ளன.

றியாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு தீவிரவாதிகளின் தாக்குதல் திட்டங்கள் பற்றிய தகவல்கள் தொடர்ந்தும் கிடைத்து வருவதனால் நாட்டின் எப்பகுதியில் இருந்தாலும் அமெரிக்கப் பிரஜைகளை மிகவும் விழிப்புடன் இருக்குமாறு தூதரக அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

# சரக்கு விமானங்களைக் கடத்தி அமெ. இலக்குகளை தாக்கத் திட்டம்

வாஷிங்ரன்,நவ.9

சரக்கு விமானங்களைக் கடத்தி அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டு வருவதாக வாஷிங்ரன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சவூதி அரேபியா, கனடா, மெக்ஸிக்கோ மற்றும் கரீபியன் தீவுகள் ஆகியவற்றில் எங்காவது இருந்து சரக்கு விமானங்களைக் கடத்தி இந்தத் தாக்குதலை நடத்த அல்கெய்டா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை ஒரு அதிகாரத தரப்பிடம் இருந்தே வந்துள்ளது. ஒருங்கிணைந்த ஒரு எச்சரிக்கையாக வரவில்லை. எனினும் அதனை அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் மிகத் தீவிரமானதாகவே பார்க்கிறார்கள்.

தாக்குதல் இலக்குகள் என்று கருதப்படும் அணு நிலைகள், பாலங்கள், அணைக்கட்டுக்கள் என்பவற்றின் பாதுகாப்பை உள்ளூர் மற்றும் மாநில அதிகாரிகள் பலப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை -

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் பத்திரிகையாளர்களைக் கடத்தி வைத்துக்கொண்டு அமெரிக்கா வசம் இருக்கும் கைதிகளை விடுவிக்குமாறு அழுத்தம் கொடுக்க தலிபான்கள் திட்டமிட்டு வருவதாக அமெரிக்க அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

(ம)



**ஈராக்கில் அமெரிக்கப் படையினரை இலக்கு வைத்து சதாம் ஆதரவுப் படையினர் நடத்திவரும் தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. தலைநகர் பக்தாத்துக்கு மேற்கே உள்ள பலூஜா நகரில் அமெரிக்க இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்: மற்றொருவர் காயமடைந்தார். உயிரிழந்த சகா ஒருவரின் சடலத்தை துணியொன்றினால் மூடும் அமெரிக்கச் சிப்பாய். (ம)**

# 48 பெண்களைக் கொன்ற காமக் கொடூரன் அமெ. நீதிமன்றில் துணிச்சல் வாக்குமூலம்!

வாஷிங்ரன்,நவ.9

அமெரிக்காவில் 48 பெண்களைக் கொன்ற 53 வயதான காமக் கொடூரன் துணிச்சலான பரபரப்பு - வாக்குமூலத்தை அளித்திருக்கிறார்.

வாஷிங்ரனைச் சேர்ந்த கேரி லியோனி என்பவரே கடந்த வியாழக கிழமை இந்த பரபரப்பு வாக்குமூலத்தை அளித்தார்.

விபசாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் இவர். தனக்குப் போதிய ஒத்துழைப்புக் கொடுக்காத விபசாரிகளை கடத்திச் சென்று கொலை செய்வது இவரது வாடிக்கை. இப்படி 48 பெண்களை இதுவரை தீர்த்துக் கட்டியுள்ளார்.

1982ஆம் ஆண்டு முதல் இது போன்ற கொலைகளை செய்து வந்த இவர், 1992ஆம் ஆண்டு பொலீஸாரிடம் பிடிபட்டார். இவர் மீதான விசாரணை சியாட் நகரிலுள்ள நீதிமன்றில் நடந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

"விபசாரிகளை திருத்த முயன்றேன். ஆனால், அவர்கள் ஒத்துழைக்கவில்லை. இதனால் 48 விபசாரிகளை கொன்றேன். அவர்களின் சடலங்களை எனது வீட்டினுள் ஒரே இடத்தில் புதைத்துள்ளேன். கொலை செய்த விபசாரிகளை புதைக்கும் முன் அவர்களின் சடலங்களுடன் மீண்டும் உடலுறவு கொண்டேன்" என்று பரபரப்பாகவும் துணிச்சலுடனும வாக்கு மூலம் அளித்துள்ளார்.

நீதிமன்றில் இவர் மீது விசாரணை நடந்தபோது அங்கு கூடியிருந்த கொலையுண்டவர்களின் உறவினர்கள் கதறி அழுதனர்.

'காமக் கொடூரன் கேரி லியோனிக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்' என்று அரச சட்டத்தரணி வலியுறுத்தினார்.

ஆனால், "மதுபோதையில் வெறி பிடித்தே இந்தச் செயலை கேரி லியோனி செய்துள்ளார். தான் செய்த குற்றங்களுக்காக அவர் மன்னிப்பும் கேட்டுள்ளார். எனவே, அவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு விதிக்கக்கூடாது" என்று கேரி லியோனின் சார்பாக வாதிட்ட சட்டத்தரணி வலியுறுத்தினார்.

இவர் மீதான விசாரணைத் தீர்ப்பு அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விபசாரிகள் கண்ட இடங்களில் சுற்றுவதால் அவர்கள் காணாமற் போனாலும் அவர்கள் குறித்து எவரும் முறையிடாததால் கேரி லியோனியின் படுகொலைகள் நீண்ட காலம் வெளியுலகிற்குத் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# 'இந்து' பத்திரிகையாளர் ஐவரை கைது செய்வதற்கு நடவடிக்கை!

## தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை,நவ.9

தமிழ்நாடு சட்டசபை நடவடிக்கைகளை மீறும் வகையில் கட்டுரை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டி, இந்தியாவின் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 'இந்து' பத்திரிகையின் 5 பத்திரிகையாளர்களைக் கைது செய்வதற்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுளளது.

கடந்த ஏப்ரல் மாதம் தமிழ்நாடு சட்டசபை நடவடிக்கைகளை விமர்சித்து 'இந்து' நாளேடு கட்டுரை வெளியிட்டிருந்தது. அது சட்டசபை உரிமையை மீறுவதாக இருப்பதாகக் கூறி சட்டசபை உரிமைக் குழுவின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

அது தொடர்பான அறிக்கையை சட்டசபை உரிமைக் குழு நேற்றுமுன்தினம் சட்டசபையில் தாக்கல் செய்தது. அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் 'இந்து' பத்திரிகையின் பதிப்பாசிரியர் என்.ரவி, நிர்வாகப் பதிப்பாசிரியர் மாலினி பார்த்தசாரதி, வெளியீட்டாளர் எஸ்.ரங்கராஜன், கட்டுரை ஆசிரியர் வி.ஜெயந்த், சிறப்பு செய்தியாளர் ராதா வெங்கடேசன் ஆகிய 5 பேருக்கும் 15 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதனை அடுத்து இவர்களைத் தேடி தமிழ்நாடு பொலீஸார் 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் நேற்று சோதனைகளை நடத்தினர். ஆனால் அவர்களில் எவரும் சிக்கவில்லை. இதனை அடுத்து அவர்களின் வீடுகளுக்கும் சென்று பொலீஸார் தேடுதல்களை நடத்தினர். எனினும் நேற்றிரவு வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

தமது ஆசிரியர்களைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ளமையும் பத்திரிகை அலுவலகத்துக்குள் நுழைந்து சோதனை நடத்தியமையும் பேச்சு சுதந்திரத்தை மீறும் செயல் என்று பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தாம் நீதிமன்றத்துக்குப் போகப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களைக் கைது செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளமை குறித்தும் பத்திரிகைக் காரியாலயத்தில் சோதனை நடத்தப்பட்டமை குறித்தும் பிரதமர் வாஜ்பாய்க்கும் அவர் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இந்துப் பத்திரிகையின் கட்டுரையையும் ஆசிரியர் தலையங்கத்தையும் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிட்ட முரசொலி பத்திரிகையின் ஆசிரியருக்கும் 15 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



THE HINDU

T.N. Assembly sentences *The Hindu* Editor, 4 others for 'breach of privilege'

• High drama as police descend on newspaper office without warrants

# பிலிப்பைன்ஸில் மீண்டும் அரசைக் கவிழ்க்கப் புரட்சி

## இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

பிலிப்பைன்ஸில் குளோரியா அரோயா அரசைக் கவிழ்ப்பதற்காக மீண்டும் ஒரு இராணுவப் புரட்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் அது முறியடிக்கப்பட்டது. இதில் முன்னாள் விமானப் போக்குவரத்து உயர் நிர்வாகி ஒருவரும் கடற்படையைச் சேர்ந்த துணைப்படை அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டனர்.

தலைநகர் மணிலாவில் உள்ள விமான நிலையத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர புரட்சியாளர்கள் முயன்றுள்ளனர். வெள்ளியன்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அரசு ஆதரவுப் படையினர் அவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினர். இரு தரப்பினருக்கும் இடையில் சில மணி நேரம் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

விமான நிலைய கட்டுப்பாட்டு அறையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவர்கள் முயன்றமை அரசுக்கு எதிரான சதிமுயற்சியே என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் அரசுக்கு எதிராக இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் புரட்சியில் ஈடுபட்டனர். ஆனால், அரச ஆதரவுப் படையினரின் துணையுடன் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. புரட்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் சரணடைந்தனர். அவர்களுக்கு ஜனாதிபதி அரோயா பொதுமன்னிப்பு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

| | ரா. சந். | | சனி |
|---|---|---|---|
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | பு. வெ. | கு. ▲ கே. | |

# இந்த வார இராசி பலன்

## 09.11.2003 - 15.11.2003

**மாற்றம்:**

09.11.2003 இல் பரணி நட்சத்திரம் மேடம் இராசியில் சந்திரன் நிற்கும்.

நாட்டில் ஆக்கமா, அழிவா எதைச் செயற்படுத்துவது? சமாதானமா - சண்டையா என எல்லோரையும் சிந்திக்க வைக்கும் காலமாகும். இந்திய அரசு தனது ஆழமான உள்நோக்கச் சிந்தனையை இலங்கை அரசின் மூலம் வழி நடத்தச் சந்தர்ப்பம் பார்த்திருக்கும் காலம்.

இந்தியாவில் ஜெயலலிதாவுக்கு சோதனைகள் ஏற்படும். வடக்கு முனையில் ஒரு முறுகல்நிலை தோன்றும். மத்திய கிழக்கு, ஈரான், பலஸ்தீனத்தில் முறையே மேற்கத்திய நாடுகளின் செல்வாக்கு மேலிடும். திட்டமிட்ட அழிவுகள் தொடரும். இந்து, பசுபிக் சமுத்திரங்களில் தாழமுக்கம் திடீரென கூடிக் குறையும். இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் மழை, காற்றால் அழிவுகள் வர இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கடும் உழைப்பு, பணவரவு, கண்திஷ்டி வந்து தடுமாறச் செய்யும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும் தாயாருக்கு, தாய்வழியினருக்கு உடல் நிலைப்பாதிப்பு கொடுக்கும். கண்மங்கும், விறைப்புக் கொடுக்கும். ஆசை வெட்கமறியாது. எனவே, உங்கள் செயற்பாடுகளில் நிதானமாக இருக்கவும். அல்லது சிலவிஷயங்களில் அவமானப்படுவீர்கள். பாதுகாப்புத்துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### இடபம்

அன்புள்ள இடத்தில்தான் ஆத்திரமும் வரும். பந்தபாசங்கள் விருப்பு வெறுப்பு, அடைவது இதனால்தான் என்பதனை மறந்துவிடாமல் எல்லோருடனும் அளவாக இருக்கவும். சங்கீத ஞானம், ரீ.வி., வீடியோ செலவு அதிகரிக்கும். ஆடை, ஆபரண வரவுகள் வரலாம். இனஜனக் கொண்டாட்டங்கள் இருக்கும். நாரிப்பிடிப்பு, சலவருத்தம் வரும், வாகனத்துறை, நகைத்துறை, சினிமாத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு இலாபம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### மிதுனம்

விதிவலிதாயின் தேடிவரும். விதியை கிரகங்களின் வலிமை மூலம் அறிந்து மதிகொண்டு செயற்படலாம். விதிகாரகனான சனி உதயத்திலிருந்து உங்கள செயற்பாடுகளை மாற்றும். பணவரவு, சகோதரர் உதவி, நண்பர்கள் வரவு என்பன இருக்கும். முழங்கால் வலி, குளிரால் விறைப்பு என்பன கொடுக்கும். வியாபாரிகள், கணனி உழைப்பாளிகள், அச்சியந்திரத் தொழில் செய்பவர்கள், குருத்தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### கடகம்

வாடிய மலரை வீசவேண்டியதுதான். தேவையற்ற பொருளை வீசிவிடுங்கள். தேவையற்றவர்களை விலக்கி நடவுங்கள். உங்கள் முன்னேற்றம் உங்கள் உறுதிநிலையில்தான் உள்ளது. அதை எவரும் மாற்றிவிட முடியாது. பணவரவு உண்டு. பிரயாணங்களால் நன்மை. நண்பர்கள் உதவுவார்கள். அரசியல்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு அதிகவருமானச் சிறப்பு ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

அதிக சிந்தனை உலக ஓட்டத்திற்கு ஒத்துவராது. சாதாரண நடைமுறை வாழ்க்கையுடன் ஓரளவு ஒத்துப போகின்ற வர்கள்தான் இவ்வுலகில் தப்ப முடியும். தொழில் சிறப்பு, பணவரவு, இடமாற்றம், உறவினர் உதவி, வாகனச் செலவு இருக்கும், தந்தை வழி உறவினர்களால் நன்மைகள் கிடைக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். குளிர்விறைப்பு, சளித் தொல்லை, மண்டைக் கனதிவரும், இடமாற்றங்களால் நன்மைகள் வரும். குருத்தொழில், பாதுகாப்புத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### கன்னி

பொருளால் வேதனை. திட்டமிட்டது நடக்காது. காலங்கடந்த ஞானம் வரும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். பொருள் தவறலாம் கவனம். புத்திர உபாதைகள் வரும். குருத்துறையினர் நன்மைகள் அடைவர். எதிர்ப்பாலர்கள் குறைகூறுவர். அயலவர்கள் எதையும் அவதானிப்பர். அதற்கு ஏற்றவாறு காரியங்களை செய்து வரவும். விறைப்பு, சளி, நாரிநோ, தலைப்பாரம் என்பன கொடுக்கும். தபால்துறை, செய்தித்துறை, ஆஸ்பத்திரி வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### துலாம்

விதிகாரனான சனீஸ்வரன் ஒன்பதாம் இடத்திலிருப்பதனால் பொருள்வரவு தாமதமாகும். திட்டமிட்ட செயற்பாடுகள் மெலல மெல்ல முன்னேறும். புத்திரர்களுக்கு உடல்நிலை பாதிப்பு கொடுக்கும். இடமாற்றங்களை தவிர்க்கவும். அல்லது பொருள்விரயமாகும். நாரி உளைவு, கைகால் விறைப்பு கொடுக்கும். புதிய நண்பர்களால் நன்மைகள் கிடைக்கும். சட்டத்துறையினர், குருத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

உதவிக்க வந்தவர்கள் உபத்திரவம் கொடுத்தாலும் உங்கள் தெய்வ உறுதி நிலையால் அவர்கள் தரும் துன்பங்கள் குறையும். பொருள் நிலை உயரும். புதியவர்கள் வரவு, இனசன வரவு என்பன இருக்கும். தூரஇடங்களுக்குப் பிரயாணம் செய்வதைத் தவிர்க்கவும். கொடுத்தது வராது. தவணை சொல்லவும். அதனால் தப்பி விடுவீர்கள். பிரயாணத்துறை, வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### தனுசு

எதிலும் ஒரு தாமத நிலை. உடல் சோர்வு, அலைச்சல் என பன இருக்கும். பொருள் வரவு இருககும். வியாழ பார்வை இருப்பதனால் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்கள் நல்லதல்ல. சளித்தொல்லை, கைகால் உளைவு, பிடிப்பு என்பன இருக்கும். தூரதேசச் செய்திகள் வரும். குருத்துறை, சட்டத்துறை, வைத்தியத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### மகரம்

பந்தம் பிடிப்பவர்கள் சில அதிகாரத்திலுள்ளவர்கள் செய்வதெல்லாம் சரி என்றுதான் சொல்லுவார்கள். மனச்சாட்சிப்படி நடக்கவும். அதனால்தான் நன்மைகள் கிடைக்கும். மாற்றங்கள் கிடைக்கும். தூர இடப்பிரயாணங்களைத் தவிர்க்கவும். பொருள் வரவு தாமதடையும். சிலருக்கு கறுப்பு நிறப் பொருள்கள் தவறலாம். தெய்வ ஆலய சிந்தனை மேலிடும். வியாபாரிகள், கடல்தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன்.*

### கும்பம்

உதயத்தில் செவ்வாய். அடிக்கடி கோபம் வரும். புத்திரர்களுக்கு உபாதைகள் கொடுக்கும். பொருள் வரவு ஏற்படும். இடமாற்றங்கள் சிலருக்கு நடக்க இடமுண்டு. வாகனச் செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. காலில் வருத்தம், குளிரால் சளித்தொல்லை என்பன கொடுக்கும். சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, சனி.*

### மீனம்

புதிய திட்டங்களால் பொருள வரவுகள் ஏற்படும். இடமாற்றங்களால் நன்மைகள் வரும். தூர தேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். பொருள் வரவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். திட்டமிட்ட செயலால் வருங்காலத்திற்கு முன்னேறத் திட்டமிடுவீர்கள். வியாபாரிகள், கடல்தொழில், பிரயாணத்துறையினர்கள், மருந்துவேலை செய்பவர்கள் அதிக நன்மை அடைவார்கள். சளித்தொல்லை, வயிற்றுக் குழப்பங்கள் வந்து மாறும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்து தருவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# கலைகள் மூலம் மனித வாழ்வு உரிய மாண்பைப் பெறுகிறது

## மிருதங்க அரங்கேற்ற விழாவில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

ஒரு மனிதனை மாண்புடையவன் ஆக்குவதற்குக் கலைகள் பெரிதும் உதவி செய்கின்றன. கலைகளின் மூலம் மனித வாழ்வு மலர்ச்சி பெறுகிறது - உரிய மாண்பைப் பெற்றுக் கொள்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவர்களான தி.மோகனராஜா, தி. கோகுலராஜா ஆகிய சகோதரர்களின் மிருதங்க அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலைகளோடு தெய்வங்களைத் தொடர்புபடுத்தி அந்தத் தெய்வங்களை இசைக் கருவிகள் மூலம் வாழ்த்தி வணங்குகிறோம். இசைக் கருவிகளுள் 'தண்ணுமை' எனப்படும் மிருதங்கம் முதன்மையானதாகும். இது தெய்வங்களை மட்டுமல்ல, மனிதர்களையும் வசப்படுத்தக்கூடியது.

இந்த இசைக்கருவி மூலம் எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்த சகோதரர்களுக்கும், அவர்களின் குரு நாதருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா தமதுரையில் தெரிவித்ததாவது:-

தமிழர்களுடைய இசை மரபிலும் கலை மரபிலும் தனித்துவமாக முகிழ்த்தெழுந்த தோற்கருவிகள் பற்றிப் பல கலைஞர்களின் ஆய்வுகள் குழுவியல் ஆய்வாக அமைகின்றன. அவற்றுள் ஒன்றான மிருதங்கம் இன்று எமது மண்ணில் பலராலும் கற்கப்பட்டு வருகிறது.

தனித்துவமான மிருதங்கக் கலையை எமது மண்ணில் வளர்த்தெடுப்பவர்களுள், கலாபூஷணம் க.ப. சின்னராசா முதன்மையானவர். இது இவருடைய 23 ஆவது அரங்கேற்ற நிகழ்வாகும். இதுபோன்ற அரங்கேற்றங்கள் இங்கு தொடர்ந்து நடைபெற வேண்டும் - என்றார்.

மற்றும் இந்த நிகழ்வில் ஆசிரியர் ஆறு.திருமுருகன், சிவஸ்ரீ. சுந்தரேஸ்வரக் குருக்கள், கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர். (எ-10)

'நியாப்' திட்டத்தின் கீழ்

# குடாநாட்டில் அடுத்த ஆண்டில் 3 குளம், 4 அணைகள் புனரமைப்பு

2003/2004 ஆம் ஆண்டுக்கான 'நியாப்' வேலைத் திட்டத்தின் மூலம் மூன்று குளங்களும், நான்கு உவர், நீர் தடுப்பணைகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் இந்த புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்.

மண்கும்பான், கரம்பன் மேற்கு, மண்டைதீவு மேற்கு, காரைநகர்ப் பகுதியில் உள்ள முறையே மண்கும்பான், மெலிஞ்சிமுனை, மண்டைதீவு, வேணன் அணைபோன்ற உவர்நீர் தடுப்பு அணைகளும் -

நெடுந்தீவில் உள்ள வெட்டுக் களிகுளம், மட்டுவிலில் உள்ள சந்திரன் கிராய்குளம், சப்பட்டியான் குளம் ஆகியனவுமே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றிற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என சம்பந்தப்பட்ட திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

வேணன், மண்டைதீவு உவர்நீர் தடுப்பணை மற்றும் சப்பட்டியான் குளம் போன்ற பகுதியில் மிதிவெடி அபாயம் இருப்பதால், இவற்றிற்கான முன்னாயத்த அறிக்கைகள், அளவீடுகளைச் செய்யமுடியாமல் இருப்பதாகவும் -

இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் சம்பந்தப்பட்டோரை கேட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (எ-49)

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில்

# மொழிபெயர்ப்பு இல்லாவிட்டாலும் ஆவணங்களை ஏற்றுக்கொள்க!

## அமைச்சின் செயலாளர் பணிப்புரை

கொழும்பு,நவ.9

தமிழில் எழுதப்பட்டுள்ள ஆவணங்களை அவற்றுக்கு மொழி பெயர்ப்பு இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஏற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படி குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர்களுக்கு உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.எம்.ஜுனைட் பணித்துள்ளார்.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் பல்வேறு தேவைகளைப் பெறுவதற்காக ஆவணங்கள் கையளிக்கப்படுகின்றன. இவ்வாறு தமிழ் மொழியில் எழுதப்பட்ட ஆவணங்கள் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லையென பொதுமக்கள் உள்துறை அமைச்சுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

திணைக்கள அதிகாரிகள் அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தி மொழி பெயர்ப்பை வழங்குமாறு வலியுறுத்தியதாகவும் அறியப்பட்டுள்ளது.

இதனால், தமிழ் மொழி மூலம், தேவைகளைப்பெற முற்படுவோர் மேலதிக பணத்தைச் செலவிட வேண்டிய நிலை இருந்தது என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)



நிதி இருந்தால்
விதியை வெல்லலாம் - ஏழைச் சிறுவர்
மேலதிக சிகிச்சை வெற்றிபெற
அரும்புகளுக்கு உதவுவீர்!

கணக்கு இல: 5-21-2022 431-4
(இலங்கை வங்கி, மேற்றரக்கிளை)

அரும்புகள்
சிறுவர் நிதியம்
யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம்
021-222-2134
: 0777-678051

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NP HG 0230 Select 2 LML (2000 கிலோ மீற்றர் ஓடியுள்ளது) ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.வாசன், 51, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் (மாம்பழம் சந்திக்கு அண்மையில்). (24391)

மாசிவன் சந்தி கிழக்குப் பக்கமாக வீட்டுடன் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தியாகராசா சண்முகலிங்கம், 48, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா. T.P. 024-2221798 (காலை 9.00 - மாலை 6.00).(24512)

## காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோயிலுக்கு அருகில், பொக்குண வீதியில் சுற்றுமதிலுடனும் கிணற்றுப் பங்குடனும் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 031 2233732 (பிற்பகல் 3.00 மணிக்குப் பின்). (சி-31135)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (24501)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (24474)

## கோழிக்குஞ்சு விநியோகம்

10.11.2003 விநியோகிக்கப்படவிருந்த குஞ்சுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 17.11.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(24502)

## வேலையாள் தேவை

ஆண் வயோதிபர் ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை. தொடர்புகளுக்கு: இல.31, அரசடி வீதி (துட்டாதெரு சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (24536)

## தவறிவிட்டது

பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த நடராசா காண்டீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.820530152V), வங்கிப்புத்தகம், CAT காட் என்பன அச்சுவேலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லக்ஸி கொமினிகேஷன், அச்சுவேலியில் ஒப்படைத்துதவவும்.சன்மானம் வழங்கப்படும். (24520)

## காணவில்லை

வல்வெட்டித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில், மூக்குக் கண்ணாடி நீல நிற கவருடன் 05-11-2003இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கு.நடராசா, உடையாமணல், வல்வெட்டித்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P 222 2975, 2263328. (24516)

## மணமகள் தேவை

1964, பூராடம், பாவம்38,U.K. மணமகனுக்கு U.K.இல் அல்லது கனடா ஐரோப்பிய நாடுகளில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. தொடர்பு: இலகு திருமண சேவை, துரை விமலா, நாச்சிமார் கோயிலடி. (24472)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பிரான்ஸ் நாட்டில் வசிக்கும், 1966ஆம் ஆண்டு பிறந்த 7இல் செவ்வாயுள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் சுயவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.விள.இல.2090, மே/பா உதயன். (24537)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976ஆம் ஆண்டு, பூர நட்சத்திரம், 4 ஆம் பாதம், 2இல் செவ்வாய், சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. குறிப்புடன் புகைப்படத்தையும் அனுப்பி வைக்கவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பப்படும். விள.இல.2089, மே/பா உதயன். (24517)

லண்டனில் பணிபுரிகின்ற, 1972 ஆம் ஆண்டு பிறந்த, விசாக நட்சத்திரம், இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 5 அடி உயரமுள்ள, அழகிய மணமகள் தேவை. புகைப்படம், சாதகக்குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். ப.கிருஸ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P.2789. (24526)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு பிறந்த, அனுஷ நட்சத்திர, சைவ போசன மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. சீதனம் உண்டு. வெளிநாட்டு வரன்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2087, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24443)

## திருமண சேவை

1971இல் பிறந்த, பூரட்டாதி நட்சத்திரம, 2இல் செவ்வாய், B.Sc. விரிவுரையாளருக்கு பட்டதாரி தரத்தில் உத்தியோக, சைவ மணமகன் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு: துரைவிமலா இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24460)

எங்களிடம் உள்நாட்டு, வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ மணமக்கள் உள்ளனர். விவாகரத்துப் பெற்றவர்களுக்கு மறுதிருமண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். முதல் கடிதத்திலேயே ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Sai Marriage Private Services, Chulipuram Center, Chulipuram. (24298)

1979, ஆயிலியம், செவ்வாயற்ற, கிரகபாவம் கூடிய Bank உத்தியோக மணமகளுக்கு உத்தியோக மணமகன் தேவை. கொழும்பு வீடும், பணமும் வழங்கப்படும். மணமக்களின் தேவைக்கு தொடர்புகொள்க. இலகு திருமண சேவை, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24483)

## மும்மொழி மொழிபெயர்ப்பு

கடிதங்கள், நூல்கள், பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் உட்பட தமிழ், ஆங்கிலம், சிங்களம ஆகிய எந்த மொழியிலிருந்தும் எந்த மொழிக்கும் மொழிபெயர்த்து கணனியில் தயாரித்துத் தரப்படும். விவரங்களுக்கு: T.Sagathevan, B.A.Lon., 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P. 2223520. (24532)

**கியர் விற்பனைக்கு**

ஒருமாதம் பாவித்த சைக்கிள் கியர் விற்பனைக்குண்டு.

**சேது களஞ்சியம்,**
230, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 2529
(24525) (34-15-18-21)

**ENGLISH & SINHALA CLASSES**

அநுபவம் மிக்க ஆசிரியரால், யாழ். மாணவர்களுக்கு ஏற்ப கிரமமான முறையில் தயாரிக்கப்பட்ட பாடங்கள் - பயிற்சிகள் மூலம் சகல மொழித்திறனகளும் (Reading, Writing, Speech, Listening) அடங்கலாக அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். ஆர்வமுள்ள மாணவர்கள், அரச, தனியார்துறை ஊழியர் உட்பட எவ்வயதினரும் தனியாகவோ, குழுக்களாகவோ இணைந்து கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் தனிக்கவனம் செலுத்தப்படும். 6முதல் 11ஆம் தரம் வரையிலான வகுப்புகள் டிசெம்பர் முதல் வாரம ஆரம்பமாகும். அனுமதிகளை முன்னதாகப் பெற்றுக கொள்ளலாம். T.SAGATHEVAN B.A. London, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். தொலைபேசி 222 3520. (24533) (21-15-18)

# முதலாம் மாத நினைவஞ்சலி



ஜனனம் 12 - 04 - 1973

மரணம் 11 - 10 - 2003

அமரர் **செல்வராசா செல்வகுமார்**

திதி: 10.11.2003

எம் குடும்ப விளக்கணைந்து
முப்பத்தொரு நாள்கள்
ஓடி மறைந்ததுவோ...!
ஆண்டுகள் எத்தனைதான்
மறைந்தோடிப் போனாலும்
ஆறாது உம் நினைவு
எம் இதயத் துடிப்பை விட்டு!

தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

மனைவி, பிள்ளைகள், தந்தை,
மாமா, மாமி.

(C/31195) (31-21-15-18)

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி இலங்கையர்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இலங்கையர் நேற்று அதிகாலை (08.11.2003) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.இலங்கையர் அவர்களின் அன்பு மனைவியும் பரந்தாமன் (ஆஸ்திரேலியா), பாலராமன் (ஆஸ்திரேலியா), கிருஷ்ணவேணி (கனடா), அரவிந்தன் (ரெலிகொம் - அம்பாறை), ரூபவேணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்: சு.நடராஜா
பொற்பதி வீதி, கொக்குவில்.

(24539) (34-21-15-18)

உ
சிவமயம்

# தசாக கிருகஜ்ஞ அழைப்பு

சுழிபுரம், பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அர்ச்சகரும், கொழும்பு கொட்டாஞ்சேனை வரதராய விநாயகர் ஆலய அர்ச்சகரும், பிரதம குருவுமாகிய

**சிவஸ்ரீ நடராஜ ஐயர் சோமாஸ்கந்தக் குருக்கள்**

அவர்கள் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி (01.11.2003)சனிக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் உத்திரக்கிரியைகள் பின்வரும் தினங்களில் கொழும்பில் நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 10.11.03 | திங்கள் | காலை | 10.00 மணிக்கு | "தசாகம்" |
| 11.11.03 | செவ்வாய் | காலை | 10.00 மணிக்கு | "மாசிகம்" |
| 12.11.03 | புதன் | காலை | 10.00 மணிக்கு | "சபிண்டீகரணம்" |
| 13.11.03 | வியாழன் | காலை | 9.00 மணிக்கு | "புண்ணியாகவும்" |

12 மணிக்கு "கிருகஜ்ஞமும்" தொடர்ந்து சமாராதனையும் நடைபெறும்.

இவ்வைபவங்களிற்கு வருகைதந்து அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்:
மனைவி: திருமதி சோ.இரத்தினேஸ்வரி
பிள்ளைகள்: தவமணி, இந்துமதி,
மருமகன்மார்: மகேஸ்வரசர்மா (சுவிஸ்), செந்திநாதக் குருக்கள்,
பேரப்பிள்ளைகள்: சஞ்சீவ சர்மா, சாருகாசினி, அஸ்வினி.

212, பிக்கரிங்ஸ் வீதி,
கொழும்பு-13. T.P.470313.

தகவல்:
நடராஜ ஐயர் இராமச்சந்திரசர்மா (சகோதரன்)

பறாளாய், சுழிபுரம்.

(C/31196) (34-21-15-18)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - 2004

மேற்படி விடயம் தொடர்பாக 2003.11.07இல் பிரசுரமாயிருந்த விளம்பரத்துடன் மேலதிகமாகப் பின்வரும் கேள்விகளும் சேர்க்கப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 2003.11.17 பி.ப.14.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2003.11.18 நண்பகல்12.00 மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 2003.11.18 பி.ப.15.00 மணி
04. ஏனைய விவரங்கள் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை


| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப்படாதவை |
|---|---|---|---|---|
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01. மாட்டிறைச்சிக்கடை | 50/= | 7000.00 | 500.00 | 250.00 |
| 02. ஆட்டிறைச்சிக்கடை | 50/= | 2000.00 | 500.00 | 250.00 |

வலி.மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம். (சி-31194)

திருமதி சோ.ஜெயந்தா
பதில் செயலாளர்,
வலி. மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

(21-15-18-35)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 - 01 - 1934

உதிர்வு 09 - 11 - 2002

அமரர் **சூசை செபமாலைமுத்து** (சீனி)

காலத்தின் கோலமையா
காவலனை கொண்டு சென்றதையா!
ஐ ஐந்துஆண்டுகள் ஆனந்தமாய் வாழ்ந்தோமையா
ஐயனவன் ஆணையினால் ஆனந்தமும் போனதையா
ஆதாரம் தேடி இங்கு நிதமும் நான் வாடுகிறேன் ஐயா!
தேடுகின்றேன் உன்முகத்தை தினமும் இப்புவியிலே
தேடினாலும் உன் மறைந்த முகம் தோன்றுமா இப்பாரினிலே
உங்கள் அன்பு நினைவுகள் ஒருபோதும்
எம்நெஞ்சைவிட்டு அகலவே அகலாது!

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

S.நாகேஸ்வரி,
16, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(24530) (26-15-18-21)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

உதயன்

## ஆயுதங்களைக் கைவிட மறுப்பது நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது

ரணில் அரசின் மூன்று அமைச்சுக்களைத் தானே பொறுப்பேற்று தென்னிலங்கை அரசியலில் பெரும் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜனாதிபதி குமாரதுங்க, நேற்றுமுன்தினம் தனது நடவடிக்கைகளுக்கான காரணத்தை விளக்கி நாட்டுமக்களுக்கு உரையாற்றினார்.

அந்த உரையின் பெரும்பகுதி, பிரதமர் ரணிலையும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவையும் சாடுவதாவே அமைந்தது. இலங்கை அரசமைப்பை மீறி ரணிலும் அவரின் பாதுகாப்பு அமைச்சரும் செயற்பட்டுவிட்டதாகவே ஜனாதிபதியின் வசைபாடல் இருந்தது.

பிரதமர் ரணில் அளவுக்கு அதிகமாக புலிகளுக்கு விட்டுக்கொடுத்துவிட்டார் என்று கண்டித்த ஜனாதிபதி, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் ஒப்பமிட்டதே தவறானது என்றும் அதனால் அது செல்லுபடியற்றதென்றும் கூடக் குறிப்பிட்டார்.

ஆனால், செல்லுபடியற்றது எனத் தாம் விமர்சிக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் முழு அளவில் பின்பற்றப்படும் என்றும், அதனைக் கடைப்பிடிக்குமாறு படையினருக்கு உத்தரவுகளைத் தான் விடுத்துள்ளார் என்றெல்லாம் அவர் தமது உரையின் கடைசியில் குறிப்பிட்டது வேறு விடயம்.

சமாதான முயற்சிகளில் - அமைதி நடவடிக்கைகளில் - ஈடுபட முன்வந்த விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிடுவதாக சூசகமாகக் கூட அறிவிக்கவில்லை என்று குற்றஞ்சுமத்திய ஜனாதிபதி, அப்படியிருந்தும் விடுதலைப் புலிகளுக்கு ரணிலின் அரசு அதிக விட்டுக்கொடுப்புக்களைச் செய்துகொடுத்துள்ளது என்று பிரதமர் ரணிலைத் தூற்றினார்.

புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிடுவதாக அறவிக்கவேண்டும் என்ற முன் நிபந்தனையை ஜனாதிபதி குமாரதுங்க இப்போதுதான் முதல் தடவையாக கூறுகின்றார் என்பது அல்ல. ஏற்கனவே, பல தடவைகள் திரும்பத் திரும்ப அவர் கூறிவந்த - கனவு கண்டுவந்த - விடயம் அது.

ஆனால், அப்படிச் செய்யமாட்டோம் என்று புலிகள் அடித்துக் கூறி வந்ததும் புதிதல்ல.

ஆனால், அவ்வாறு செய்யமாட்டோம் என்பதற்கு புலிகள் கூறிவந்த நியாயமான காரணங்கள் அப்படியே ஜனாதிபதியின் வெள்ளி இரவு உரையில் பிரதிபலிக்கப்பட்டு, நிருபிக்கப்பட்டதுதான் புதிய அம்சம்.

ஈழத் தமிழரின் பங்களிப்பின்றி - அவர்கள் மீது சிங்களப் பேரினவாதம் தனது மேலாதிக்கத்தை திணிப்பதற்கு வகைசெய்யும் விதத்தில் கொண்டு வரப்பட்டதே இந்த அரசமைப்பு. இந்த அரசமைப்பின் கீழ் இனப்பிரச்சினைக்கு - தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வைக் காணமுடியாது என்பது புலிகளின் வாதம்.

அது மட்டுமல்ல, ஈழத் தமிழர்களுக்கு நீதியான - நேர்மையான - தீர்வைத்தரும் நல்லெண்ணம் சிங்களத் தலைமைக்கு இல்லை. சிங்களத் தரப்பில் ஆட்சியில் இருக்கும் ஒருதரப்பு விட்டுக்கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வுகாணமுயன்றால் எதிர்க்கட்சியில் இருக்கும் மறுதரப்பு அதனைக் குழப்பும், அதுவே கடந்த அரை நூற்றாண்டு கால சரித்திரமாக இருந்து வந்துள்ளது. எனவே, தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் ஒரு தீர்வு காணப்பட்டு அதை நடைமுறைப் படுத்தப்படும்வரை அவர்களின் பாதுகாப்பு அரணாகத் திகழும் - அவர்களுக்குப் பேரம்பேசும் வலுவைத் தந்துள்ள - ஆயுதங்களைக் கைவிடுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் புலிகள் தெரிவித்திருந்தனர்.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட ரணில் அரசையும் - ஏன் சமாதான முயற்சிகளையே - தடுக்குப்போட்டு வீழ்த்த ஜனாதிபதி குமாரதுங்க இவ்வாரம் எடுத்த நடவடிக்கைகள் காலங்காலமாக சிங்களப் பேரினவாதம் நடந்து கொண்டுவரும் போக்கின் தொடர்ச்சிதான்.


சமாதானச் செயற்பாடுகளுக்கே அடிநாதமாகத் திகழ்ந்த - திகழும் - புரிந்துணர்வு உடன்பாட்டையே இப்போது சுமார் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் செல்லுபடியற்றது என விமர்சிக்கும் நாட்டுத் தலைவரை வைத்துக்கொண்டு -

பேச்சுக்களோடும் அது தொடர்பான நடைமுறைகளோடும் நேரடித் தொடர்புபட்ட பாதுகாப்பு அமைச்சையும் உள்துறை அமைச்சையும் திடீரெனப் பறித்து சமாதான நடவடிக்கைகளையே அந்தரத்தில் தொங்கவிடும் நாட்டின் தலைமையை வைத்துக்கொண்டு -

எப்படி இறுதித் தீர்வு காணப்பட்டு அது நடைமுறைப் படுத்தப்பட முன்னர் தங்களின் ஒரே பாதுகாப்பான ஆயுதங்களைத் தமிழர்கள் கைவிட முடியும்.

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பது போல எந்த நெருக்கடி - நெருக்குவாரம் - வந்தாலும் ஆயுதங்களைக் கைவிடமாட்டோம் என்று புலிகள் இயக்கம் விடாப்பிடியாக - பிடிவாதமாக - இருந்து வருவது நியாயமானதே என்பது தென்னிலங்கை அரசியலில் கடந்த சில நாள்கள் இடம்பெற்ற சம் பவங்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றன. குறிப்பாக ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளும் அவரது உரைகளும் புலிகளின் கடும்போக்கை சரியென நிருபித்திருக்கின்றன.

## காலத்தின் பதிவு



தூக்கி வளர்த்த துயரம் — படம் : பிரேம்

## டெங்கு, மலேரியா காய்ச்சல் குடாநாட்டில் பரவுகின்றன!

### ஆஸ்பத்திரி வட்டாரங்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ். குடாநாட்டில் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவத்தொடங்கியிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் எச்சரித்திருக்கின்றன.

கடந்த வாரம் மட்டும் இந்நோய்களினால் பீடிக்கப்பட்ட சுமார் 30 நோயாளிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

குடாநாட்டில் பருவமழைபெய்ய ஆரம்பித்திருப்பதால், அடுத்துவரும் வாரங்களில் இந்நோய் மேலும் பரவலாம் என்று யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த வருடமும் நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் மலேரியா காய்ச்சலினால் பலர் பீடிக்கப்பட்டிருந்தனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை மிகவும் அவதானமாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் -

தற்போதைய நோய்ப் பரம்பல் நிலை தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் -

இதன்மூலம் கிராமப்புற மக்கள் மத்தியில் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும் என தாம் எதிர்பார்க்கப்படுவதாகவும் யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-4)

## சுழிபுரம், அராலியில் மீனவர் வீடுகளை புனரமைக்க ரூ.25 ஆயிரம் அன்பளிப்பு

வலி.மேற்கு,நவ.9

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள 60 கடற்றொழிலாளர்களின் சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கென கடற்றொழில் திணைக்களத்தினால் 25 ஆயிரம் ரூபா நிதி நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

கடற்றொழில் திணைக்களம் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது என்றும் -

இதன் அடிப்படையில் கடந்தகால வன்செயல்களின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு இந்த நிதி நன்கொடையாக வழங்கவுள்ளது என்றும் - திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அராலி, சுழிபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 60 கடற்றொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு நன்கொடை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கடற்றொழில் பரிசோதகர் எஸ்.நக்கீரன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (எ-175)

## வலி.மேற்கில் 331 குடும்பங்களுக்கு ரூ.25 ஆயிரம் கொடுப்பனவு கிடைக்கும்

வலி.மேற்கு,நவ.9

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுள் 331 குடும்பத்தினருக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான ரூ.25 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவுக்குரிய காசோலை சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளையினரால் அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கொடுப்பனவு பெறவுள்ளோரின் விவரம் வருமாறு:-

வட்டு. வடக்கு - 39, சங்கரத்தை - ஒன்று, அராலி மேற்கு - 09, அராலி மத்தி - 45, அராலி தெற்கு - 24, அராலி கிழக்கு - 60, அராலி வடக்கு - 27.

வட்டு. தெற்கு - 06, வட்டு தென்மேற்கு - ஒன்று, தொல்புரம் மேற்கு - 59, மூளாய் - 55.

பதினொரு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 331 குடும்பங்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறவுள்ளன.(எ-175)

### நாளை

ஐப்பசி 24
திங்கட்கிழமை
(10.11.2003)
திதி : பிரதமை
முற்பகல் 9.06 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மாலை 6.42 வரை
சுபநேரம்: 12.05 - 1.35
ராகுகாலம்: 7.35 - 9.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உன்னையே நீ நேசிப்பாயானால் பலர் உன்னை வெறுகத் துவங்குவர்.


## வெள்ளம் புகுந்துகொண்டதால் மக்கள் பலரும் இடம்பெயர்வு

சாவகச்சேரி பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால் நகரத்தை அண்டியுள்ள 'உதயசூரியன் கிராமம்' வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால், மேற்படி கிராமத்தில் உள்ள 30 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

மேற்படி குடியிருப்புக்களுக்கு அருகில் கடல் நீரேரி காணப்படுகின்ற போதிலும், அதற்குச் செல்லும் வாய்க்கால் அடைக்கப்பட்டுள்ளதால் வாய்க்கால் ஊடாகவரும் வெள்ளம் கடலைச் சென்றடையாமல் வீடுகளுக்குள் புகுந்துவிட்டதாகக் கூறப்பட்டது.


மேற்படி கிராமத்தில் வசிப்பவர்களில் அநேகர் சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் என்றும் - வெள்ளம் புகுந்ததையடுத்து இவர்களில் அநேகர் வீடுகளைவிட்டு வெளியேறிவிட்டனர் என்றும் கூறப்பட்டது. (எ-117)




இன்று ஆரம்பம்

YAMAHA

*Touching Your Heart*


ஏக விநியோகஸ்தர்: -

YAMAHA PLAZA

(Sales, Service & Spares)

UTHAYAN Graphics

298, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777 198000, 0777 563803

Web Site : www.yamahaplaze.com

# பிரதமருடனான வேறுபாடுகளைக் களைந்து அவரது அமைச்சரவையை அங்கீகரியுங்கள்!

## ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு ஆனந்தசங்கரி கடிதம்

கொழும்பு,நவ.9

பிரதமருடன் உள்ள வேறுபாடு களைக் களைந்து, அவரது சிபாரி சுக்கமைய அவரின் அமைச்சரவையை அங்கீகரியுங்கள். அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக் கும் அதிகாரத்தை அவரிடமே விட்டு விடுங்கள். இதுவே நாட்டுக்கு சுபீட் சத்தை உருவாக்கும்.

- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதி பதி குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் இவ்வாறு கோரியி ருக்கின்றார்.

அவரது கடிதம் வருமாறு:

என்னால் தங்களுக்கு 30.10.2003 திகதியிட்டு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கிடைத்ததாகவும், பின்பு தொடர்பு கொள்வதாகவும் தாங்கள் அறிவித்திருக்கும் இவ்வேளையில் மேலும் சில ஆலோசனைகளை தங் களின் தீவிர பரிசீலனைக்காக அவ சர அவசரமாகத் தெரிவிக்கின்றேன்.

நான் எனது முன்னைய கடிதத் தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந் தேன் என்பது ஞாபகம் இருக்கும் என நம்புகின்றேன். எம் மக்களுக்கு இன்று வேண்டுவதெல்லாம் சமாதா னமே! நிரந்தர சமாதானமும் இயல் பான வாழ்க்கைக்கு விரைவில் திரும்பு வதுமேயாகும். அவர்கள் தம் சொந்த வீடுகளுக்குச் சென்று இயல்பு வாழ்க் கையை ஆரம்பிக்க விரும்புகின்றார் கள். அதுமட்டும்தான் இப்போது அவர்களுக்கு வேண்டியது.

தற்போதைய அரசியல் போக்கு சிங்கள, தமிழ், இஸ்லாமியர் என்ற பேதமின்றி அனைவரின் உள்ளத்தை யும் மீண்டும் பெரிதாக குழப்பமடை யச் செய்துள்ளது. எதுவித இடை நிறுத்தமும் இன்றி சமாதான முயற்சி கள் தொடரும் என தாங்கள் அறி வித்திருந்தாலும், உண்மையாக இது நடைபெறவேண்டுமாயின் தாங் களும் பிரதம மந்திரியும் உங்கள் இருவருக்கும் இடையில் உள்ள அபிப் பிராய பேதங்களை மறந்து ஒன்றி ணைந்து செயற்படாது - இனப்பிரச்சி னைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படும் என்றோ - எல்லோரும் சேர்ந்து இலங் கையை ஒரு சொர்க்க பூமியாக ஆக்கி, அதில் சமாதானத்துடனும், நட்புட னும் வாழமுடியும் என்றோ எவராலும நம்புவதற்கு இல்லை.

தாங்கள் இருவரும் சுறுசுறுப்பான இளைய தலைமுறையினர்; மக்களின நன் மதிப்பைப் பெற்ற தேசபக்தி நிறைந்த இரு பிரபல குடும்பத்தில் பிறந்தவர்கள். ஆகவே, நாட்டின் நன்மையைகருதி உங்களுக்கிடை யில் உள்ள அபிப்பிராய பேதங் களை மறந்து கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக் கும், பொருளாதார நெருக்கடிகளுக் கும் ஒரு நிரந்தர தீர்வு ஏற்படுத்து வீர்களென எமது மக்கள் நம்புகின் றார்கள். இன்றைய உலகம், உங் கள் இருவரையும் உயர்ந்த தலைவா களாக மதிக்கின்றது. ஆகவே, இணைந்த உங்கள் இருவரின் ஆட் சிக் காலமும் எம் நாட்டுச் சரித்திரத் தில் ஒரு பொற்காலமாக அமைய ஒரு நிரந்தரத் தீர்வை இணைந்து ஏற் படுத்துங்கள். அதற்காக உங்கள் இருவருக்கும் இன்று வேண்டியது நம் நாட்டின் மீதும் எம் மக்கள் மீதும் பற்றும், திடகாத்திரமும், தைரியமுமே. இவை அனைத்தும் உங்கள் இரு வரிலும் இல்லாமல் இல்லை.

இந்நாட்டில் இன்றுள்ள இருவர் ஒன்று சேர்ந்தால் எம் நாட்டின் பிரச் சினையைத் தீர்ப்பது கஷ்ரமான காரியம் இல்லை என நான் திடமாக நம்புகின்றேன். இந்த இருவர் ஜனாதி பதியாகிய நீங்களும் பிரதம மந்திரி யும் தான்.

இன்றைய சமூகம் ஒரு சர்வாதி கார ஆட்சியை கடுகளவும் விரும்பாத சமுதாயமாகும். நாம் அனைவரும் ஜனநாயக கோட்பாடுகளுக்கு கட் டுப்பட்டவர்களே. தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் இந்நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற பெரும் பங்கு வகித்தும் பெரும் தியாகங் களை செய்தும் உள்ளோம். ஜன



நாயக முறைப்படி நடந்த தேர்தலில் முறைப்படி தெரிவான 18 நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பொதுசன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தின் கால எல்லையை நீடித்த போது அதை ஆட்சேபித்து 1977ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்ட நாம் 1983ஆம் ஆண்டு பத வியை துறந்தோம். ஒரு நாடாளுமன் றம் தனது கால எல்லையை நீடிப் பது உலக சம்பிரதாயங்களுக்கு முரணானதாகும். யுத்தம் போன்ற அவசர காலங்களில் மட்டும் அப்படி நீடிப்பது வழக்கம். நாங்கள் எவ் வாறு ஜனநாயக கோட்பாடுகளை மதித்தோமோ அதேபோல எமது நாட்டு மக்களும் இந்த 16 தொகுதிகளுக் கும் தேர்தல் வைக்க முற்பட்ட போதெல்லாம் அந்த ஆறு வருடங் களில் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் எந்த இனத்தவரும் நியம னப் பத்திரம் தாக்கல் செய்யாமல் இருந்ததும் பெருமைக்குரிய விடய மாகும். நாமும் இந்த நாட்டு மக்க ளும் ஜனநாயகத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை வைத்திருந்தோம் என் பதற்கு இது ஒரு சிறந்த உதாரண மாகும்.

1978 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட அரசமைப்பு நம் நாட்டிற்கு ஒரு சாபக்கேடாகவே அமைந்தது. இருமாறுபட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகளில் ஒன்று பிரதமர் பதவியை ஏற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்க மாற்றுக் கட்சியை சேர்ந்தவர் ஜனாதிபதியாகக் கூடிய நிலைமையை இந்த அரசமைப்பே உருவாக்கியது. இதுபோன்ற நிலை நம் நாட்டில் என்றும் ஏற்பட்டதில்லை. ஒரு நாட் டின் முன்னேற்றத்திற்கு இந்த முறை பெரும் பாதகமாகவே அமையும் என் பதை எவரும் ஒத்துக்கொள்வார்கள். இத்தகையதொரு சூழ்நிலையில் அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் அரசமைப்பில் இருந்தாலும் கூட, சில அதிகாரங்களை நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி போல் செயற்படாது ஜனநாயக பண் புகளுக்கு மதிப்பளித்து பெருந்தன்மை யோடு செயற்பட வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் கருத்தா கும். அதிகாரங்கள் தவறாகப் பிர யோகிக்கப்பட்டால் எதிர்காலத்தில் அவை முன் உதாரணமாக காட்ட இடமுண்டு. பிறர் எமக்கு எதைச் செய்தால் விரும்பமாட்டோமோ அதை நாம் பிறருக்கு செய்வதை தவிர்ப் பதே மிக்க நன்றான விடயமாகும்.

சமாதானத்தையும் இயல்பு வாழ்க் கையையும் விரும்பும் பல்வேறு இனத் தைச் சேர்ந்த என் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இக் கடிதத்தை எழுதுகின்றேன். எனது இக் கடிதக்கோவை பக்கச் சார்பு டையதாக தோன்றுவதாக தவறு தலாக சந்தேகிக்க வேண்டாம். ஆளும் கட்சியையும் எதிர்கட்சியை யும் இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஏற்படுத்தக் கூடிய வகையில் ஒருபொது நிலைப்பாட்டை எடுக்க வைப்பதே எனது நோக்கமும் வர லாற்றுக் கடமையும் ஆகும். இனப் பிரச்சினை தீர்வுக்கு தாங்கள் எடுத்த பல்வேறு முயற்சிகளைப் பற்றியும் யாரால் எப்படி நேர்வே நாட்டினர் இப்பணியில் ஈடுபட்டனர் என்பதும் நாம் அறியாததல்ல.

தயவுசெய்து பிரதம அமைச்சரு டன் உள்ள வேறுபாடுகளைக் களைந்து பிரதம அமைச்சரின் சிபார்சுக்கமைய அவரின் மந்திரி சபையை அங்கீகரித்து மந்திரி சபைக் கூட்டங்களை தலைமை தாங்கும் அதிகாரத்தை அவரிடமே விட்டு விடுங் கள் எனக்கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு செயற்பட்டால்தான் ஒரு சுபீட்சமான சூழ்நிலை உருவாகும் என்பது மட்டுமல்ல. சமாதானப் பேச்சு மேசைக்கு சம்பந்தப்பட்டவர்கள் வர ஏதுவாகவும் அமையும் -

ஜனாதிபதி அவர்களே! மீண்டும் ஒரு தடவை! இப்போது நமக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பம் நல்லதொரு சந்தர்ப்பம் மட்டுமல்ல இறுதியான சந்தர்ப்பம் என்பதையும் அறிந்து கொண்டு சமாதான முயற்சிகள் வெற்றி பெற தங்களால் முடிந்த சகல வித மான ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவித் திருக்கிறார். ஆனந்தசங்கரி. (ஐ)

# 795ஆம் இலக்க பஸ் சேவை நேரத்தை மாற்றி அமைக்குக!

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,நவ.9

மக்கள் மீள்குடியமர்ந்துள்ள கிரா மங்களான இளவாலை, பன்னாலை ஊடாக நடைபெற்று வரும் 795ஆம் இலக்க பஸ் சேவையை அரச ஊழி யர்களின் நன்மைகருதி காலை, மாலை வேளைகளில் நேரமாற்றம் செய்து தருமாறுகோரி வலிகாமம் தெற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உடுவில் உதவிப் பிரதேச செய லர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் தலை மையில் அண்மையில் பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

அரச ஊழியர்களின் போக்கு வரத்து வசதிக்கேற்ப, 795ஆம் இலக்க பஸ் சேவையில் காலை, மாலை வேளைகளில் நேரமாற்றம் செய்வது டன் -

இச் சேவையை மருதனார்மடம் வரை நீடிக்குமாறும் அந்தத் தீமானத் தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பிற்பகல் 4மணிக்கு நடைபெற்று வந்த 811ஆம் இலக்க பஸ் சேவையை நேர மாற்றம் செய்து 4.15 மணிக்கு நடத்தியபோதிலும், இந்த நேர மாற்றத்தால் அரச ஊழி யர்களுக்கு சாதகமான பயன் ஏதும் ஏற்படவில்லை எனவும் -

எனவே, இச் சேவையை மாலை 4.30 மணிக்கு மாற்றியமைத்து, அரச ஊழியரின் போக்குவரத்துக்கு வசதி செய்து தருமாறும் வட பிராந்தியப் போக்குவரத்து சபை முகாமையாளரை கோருவது எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. (எ-152)

# அன்பின் அரசை அமைத்திடுவோம்!

வேதாகமத்தில் தொடக்கநூல் முதல் திருவெளிப்பாடுவரை, படைப்பு முதல் இறுதிவரை, நாம் காணும் ஓர் அடிப்படை உண்மை 'இறையன்பு.' இறைவன் தனது அன்பரசை உலகி லும், மனித உள்ளத்திலும் அமைக்க எடுக்கும் முயற்சி மீட்பு வரலாற்றில் இன்றும் இழையோடுவதை நாம் காண லாம். இந்த அன்பரசு உருவாக, இறை யரசை அமைக்க தேவைப்படுகின்ற சூழ்நிலை அல்லது நிபந்தனை வேதா கமத்தில் முதல் நூல் தொடக்கம் இறுதி நூல்வரை குறிப்பிட்டுக் காட் டப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அதுதான் மனமாற்றம் அல்லது மனந்திரும்புதல்.

## ஞாயிறு நற்பிரசாதம்

பாவத்தில் உருவாகி, பாவத்தில் பிறந்து, பாவத்தில் வளர்ந்து, பாவத் தில் மடியும் ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஓர் அரசை ஏற்படுத்திக் கொண்டு அதில் நிறைவுகாண விரும்பு கின்றான். ஆனால், அவன் தன் விருப்பத்தை யைத்தான் காணுகின்றான். அவன் ஏற்படுத்துகின்ற அரசு ஓர் ஆதிக்க வெறிபிடித்த உலக அரசாகவோ, செல்வ அரசாகவோ, புகழ் அரசாகவோ, அல்லது குடிபோதை அரசாகவோ இருக்கலாம். அங்கு நிறைவு என்பது இல்லை.

ஏனென்றால், அனைத்திலும் மனி தன் தன்னிஷ்டப்படி தான்தோன்றித் தனமாக இறைவனுக்கு எதிரான ஓர் அரசையே இறுதியில் அடைகின்றான். ஒரே வார்த்தையில் கூறவேண்டுமா யின் மனிதன் பாவ அரசையே உரு வாக்குகின்றான். அதில் எப்படி அன் பரசைக் காணமுடியும்? எப்படி நிறைவு பெறமுடியும்? ஆகவே, இறைவனின் அன்பரசை அனுபவிக்க வேண்டுமா னால் நாங்கள் ஒவ்வொருவரும் பாவ அரசை விட வேண்டும். எனவே, மனந் திரும்புதல் என்றால் பாவத்தின் மீதுள்ள நாட்டங்களிலிருந்து மன தைத் திருப்புவது மட்டுமல்ல பாவத் திற்கு செல்லும் மனதை இறைவன் பால் திருப்பவேண்டும்.

அருட்சகோ.
எஸ்.நேசநாயகம்

இறையரசு மலர வேண்டுமானால் பாவ அரசு மறைய வேண்டும். நம்மில் மனமாற்றமின்றி குறுகிய நோக்கோடும் குற்றம் கண்டுபிடிக்கும் மனத்தோடும் நற்செய்தி அறிவிப்பை கேட்பதும், இறைவார்த்தையை வாசிப் பதும், திருவழிபாட்டில் முழுமையாக பங்கு பெறுவதும் இறையரசை இறை வனின் அன்பரசை நமது கண்களுக்கு மறைத்துவிடும். எனவே, நாம் கட்டி வைத்திருக்கின்ற, ஆட்சி செய்கின்ற பாவ அரசை ஒழித்துவிட்டு இறை வனின் அன்பரசை நம்மத்தியில் பிர மாண்டமாக கட்டி எழுப்புவோம்.

## நூல் வரிசை



நூல்: ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும் (ஆய்வரங்கக் கட்டுரைகள்)
வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு - வடக்கு - கிழக்கு மாகாணம்.

கவிதை, சிறுகதை, நாவல் போன்ற ஆக்க இலக்கியத் தொகுப்புக் களையும் நாட்டாரியல், வாய்மொழிப் பாடல்கள் போன்ற பல்துறை சார்ந்த ஆய்வுநூல்களையும் நாம் பதிப்பித்துள்ளோம். அரச கரும மொழியாக தமிழ், பெண்ணியம், நாட்டாரியல்வழக்கு, சிறுவர் இலக்கியம் எனும் வரி சையில் இப்போது இதழியல் வரலாறு வெளிவருகிறது. 2002ஆம் ஆண்டு இலக்கிய விழா ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளில் எட்டுக் கட்டுரைகள் இந்நூலில் அச்சாக்கப்பட்டுள்ளன.

இதழியல் சம்பந்தமான ஆரம்ப அறிவூட்டல், வாசிப்புக் கலாசாரம் என்பவற்றிற்கும் இந்நூல் பெரிதும் உதவும் என்பது எமது எதிர்பார்ப்பு. பல்வேறு தலைப்புக்களில் துறைபோந்த நல்லறிஞர்கள் சமர்ப்பித்த இக் கட்டுரைகளை ஒரு சேர தொகுத்தளித்ததன் மூலம் இதழியலின் வர லாற்றை யாவரும் அறிந்துகொள்ளச் செய்த திருப்தி ஓரளவாவது எமக்கு ஏற்படுகிறது. இந்நூலை ஆர்வலர்கள் நன்கு பயன்படுத்தி பலன் பெறவேண்டு மென அவாவுகின்றோம்.

சீ.ஏ.மோகன் றாஸ், பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள்.



நூல்: சிற்பி (சஞ்சிகை)
வெளியீடு: ஜீவஒளி இலக்கிய மன்றம்

இது தென்னிந்தியத் திருச்சபை, இன்பச்சோலை திருச்சபை நிலையத் தால் வெளியிடப்படும் ஒரு சமூக சஞ்சிகையாகும். மிகவும் பின்தங்கிய கிராமங்களில் உள்ள சிறுவர், சிறுமிகளினதும், இளைஞர், யுவதி களினதும் உணர்வுகளை எழுத்துருவாக்கி உலகிற்கு வெளிகாட்டும் ஓர் ஏடாக இந்தச் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. இதுவரை 5வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஏடும் ஒவ்வொரு தலைப்பாக:

1.கிராமக்கல்வி
2.கிராமத்துப் பெண்
3.கிராமத்து சிறுவன்
4.போரும் ஏழைகளும்
5.சமாதானமே வேண்டும் ஆகிய தலைப்புக்களில் வெளியிடப் படுகின்றன. இந்த இதழ்களுக்கு ஒரே ஆசிரியராக இல்லாமல் ஒவ் வொரு இதழுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் பிள்ளைகளில் இருந்து முன்வந்து பொறுப்பெடுத்து செய்கின்றார்கள். இந்த இதழ்கள் மூலமாக பிள்ளை களின் ஆக்கத்திறன்கள் வளர்வது மட்டுமன்றி இச்சமூகங்களின் உணர் வலைகளும் வெளிக்கொண்டு வரப்படுகிறது.



நூல்: கவிதைத் துளிர்
ஆசிரியர்: செல்வி அனுஷானி அழகராஜா.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் தரம் 9 மாணவியான அனுஷானி அழகராஜாவின் "கவிதைத்துளிர்" என்ற 24 கவிதைகளை உள்ளடக்கிய நூல் 2003.10.18 அன்று வெளியிடப்பட்டது.

நூலில் அணிந்துரையில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று, சிறிய வயதிலேயே சமூகத்தைக் கூர்ந்து நோக்கும் திறன், இயற்கையின் அழகினை நுணுகிப் பார்க்கும் போக்கு, மனம் ஆழமாகப் பதிந்து நெகிழ்வடைந்த நிலைகள் என்பவற்றை நம்ப முடியாத அளவுக்கு, நூலாசிரியர் கொண்டிருப்பதை நூலைப்படிப்போர் புரிந்து கொள்வர்.

இதில் அடங்கியுள்ள 24கவிதைகளும் வாழ்த்துக் கவிதைகளாக - இயற்கையைப் பற்றியவைகளாக - மொழியுணர்வு பற்றியவைகளாக - பண்பாட்டு விழுமியங்கள் பற்றியவையாக சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களையும் சந்தித்துச் சிந்திக்கச் செய்யும் செல்வ நெடிவதைப் அங்கங்கே காணமுடிகிறது.

சிறியவரான நூலாசிரியர் போர்க் காலத்துக்குள்ளேயே பிறந்தவராயி ருப்பதனால் போரின் வடுக்களையும் சமாதானத்தின் தேவையையும் உள்ளத்தைத் தொடும் வகையில் உணர்வுபூர்வமாக மனக்கண் முன் காட்சியாக்கும் வகையில் கவிதைகளாய் வடித்துள்ளார்.

விடுதலை வேட்கை பண்பாட்டு சமூகப்பார்வை மீதான சீற்றம் தமிழ் வளர்ச்சி மீதான தாகம் என்பன அனுஷானியின் அடிமனதிலிருந்து ஆழ்ந்த கருத்துக்களுடன் கவிதைவடிவில் எழுந்துள்ளமையையும் நன்கு அவதானிக்க முடிகிறது.

- கவிப்பார்வன்.

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31110)


## பரிசளிப்பு நிகழ்வுகள்

வலி.தெற்கு,நவ.9

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர் வரும் 12ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் செல்வி சி.கெங்காமலர்தேவி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளா கா.சந்திரபாலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, வலி. வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் பொன்.வைரமுத்து ஆகியோரும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை கோட்ட ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி இ.இராமலிங்கமும் கலந்துகொள்கினறனர். (எ-152)

★ ★ ★

சாவகச்சேரி,நவ.9

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரத விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சி.வீரசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கோட்ட உதவிக் கல்விப்பணிபபாளர் நா.சத்தியநாதன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் இ.கயிலைநாதன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானிய கிளை பிரதிநிதி திருமதி சரஸ்வதி பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-31)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.9

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ)


## தேசிய ஆங்கில டிப்ளோமா

பொதுப்பரீட்சை May 2004

வீட்டிலிருந்து இலகுவாக கற்கக்கூடியதான தமிழ் மூலமான 24 புத்தகங்களைக் கொண்ட பாடநெறிகள்.

**NATIONAL DIPLOMA IN ENGLISH FOR TEACHERS**
**NATIONAL DIPLOMA IN ENGLISH FOR WORKFORCE**
**NATIONAL DIPLOMA IN ENGLISH FOR COMMUNICATION**

தெரிவு செய்யும் பாடநெறி அடங்கிய விண்ணப்பம் மற்றும் ருபா 1,000 இற்கான காசுக்கட்டளையை 'PSALMS TECHNOLOGIES' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவேண்டிய முகவரி:

Department of Engligh,
Psalm Institute of Engineering and Technology
22 - 1/3, Galle Road, Dehiwala. (C/31086) (30-15-11-21)


## முதலாம் ஆண்டு நினைவுகளில்.....



மலர்வு 22 - 10 - 1932

உதிர்வு 21 - 10 - 2002

### அமரர் சண்முகம்பிள்ளை கனகசபாபதிப்பிள்ளை

(சண்முகக்குட்டி)

திதி:பிரதமை

கடமைகள் ஒவ்வொன்றாய் நிறைவு செய்த போதும்
நாம் எண்ணவில்லை இது தான் தங்கள் வாழ்வின்
இறுதிப் பொழுதென்று!
இன்னும் நீங்கள் விழுதெறிந்து வேர் விடுவீர் என்றிருக்க
கடமையெல்லாம் முடிந்ததென மறைந்து விட்டாலும்
எப்போது எங்கும் எதிலும் எல்லாமாக நீங்கள்
வர வேண்டும் ஐயா! தொடர்ந்தும் உங்கள்
ஆசி எங்களுக்குக் கிடைக்கட்டும்!

என்றும் பிரிவால் வாடும்:
திருமதி க.பொன்னம்மா (மனைவி)
கேணிக்கரை, அளவெட்டி.
குடும்பத்தினர்.

(24498)(35-21-15-)


## மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**

யாழ்ப்பாணத்தில் 11.11.2003 - 16.11.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு
இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(தயவுசெய்து முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-30109) (24-11-15)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 - 11 - 1952

மறைவு 22 - 10 - 2002

### அமரர் கந்தையா சிறீஸ்கந்தராசா

திதி: 09.11.2003 (பிரதமை)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம்துயரம்
அப்பா என்றழைக்க எமக்கிங்கு
ஆருமில்லை
மாறாத சோகத்துடன் மாநிலத்தில் நாம் வாழுகின்றோம்.

24/3, 2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.

(24524) (34-11-15-21)


## விவசாயிகளே!

## உங்களுடைய நெல்வயல்களில்




கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி,
நெலுக்காய் போன்ற களைகளின் தொல்லையா?
கவலையை விடுங்கள்!
குறைந்த செலவுடன் விதைத்து 14~35 நாள்கள் வரை
பாவிக்கக்கூடிய அதிநவீன களைநாசினி

**விப்சுப்பர் 7.5 ஈ.டபிள்யூ**

இதற்கு நிகர் வேறு எதுவுமேயில்லை.
நாசினி தெளித்து நான்கு மணித்தியாலத்திற்கு மழை பெய்யா திருப்பது நல்லது.
ஹாக்ரொஸ் விப்சுப்பர் சிறியது! நல்லது!

ஹரிசன்ஸ் கெமிக்கல் (பிறைவேற்) லிமிட்டெட்,
இல.07, பிரே புறூக் பிளேஸ்,
கொழும்பு - 02.

கிடைக்கும் இடம்: முன்னணி வாய்ந்த விவசாய இரசாயன விற்பனை நிலையங்கள்.

யாழ். தொடர்புகளிற்கு:
தொழில்நுட்ப விற்பனைப் பிரதிநிதி
எஸ்.கே.சாமி அன் சன்ஸ்,
235, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

களை நாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளவும்.

(சி-31170) (25-3)


## நெஞ்சை விட்டகலா 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 15 - 04 - 1904

அரன் அடியில் 30 - 10 - 1990

### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

திதி: பிரதமை 09.11.2003

அகம் நிறைந்த அப்பாவே! அணையாத் திருவிளக்கே!
ஆண்டுகள் பதின்மூன்றானாலும் ஆறவில்லை எம்துயரம்
காலமெல்லாம் கடமைசெய்து காத்து வந்தீர் எங்களையே
கலங்கித் தவிக்க வைத்து கலந்தீரோ இறைபாதம்?
பொய்மை மிக்க வாழ்வுதனை புரிந்தே உளம் நோக
பொல்லாத உலகைவிட்டு பொன்னுலகம் நாடியதேன்?

தங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

(24479) (25-11-15-21)

ஜனாதிபதி - அரசு இடையில்

# தெற்கில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டிக்கு புதிய ஜனநாயகக் கட்சி செயலர் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.9

தெற்கில் தற்போது ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியை புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. இது குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் சி.க. செந்திவேல் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்குமிடையில் உருவாகியுள்ள ஆட்சி அதிகாரப் போட்டியில் அரசியல் தீர்வுக்கும் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான மக்களின் அபிலாசைகள் பலியிடப்படக்கூடிய சூழல் தோன்றியுள்ளது. பேரினவாதப் பின்னணியோடும் ஆட்சி அதிகாரப் பசியோடும் உருவாக்கப்பட்டுள்ள இந்த அரசியல் நெருக்கடியானது மீண்டும் யுத்தத்தை மூட்டக்கூடிய அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய அரசியல் அதிகாரப் போட்டி வளர்க்கப்படுவதை எமது புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயத்தில் நாட்டினதும் வடக்கு-கிழக்கு மக்கள் உட்பட முழு மக்களினதும் நலன்கருதி அரசியல் நெருக்கடியைத் தணிக்க முன்வரவேண்டும். அதேவேளை, அரசியல் தீர்வின் ஆரம்ப நடவடிக்கையாக புலிகள் இயக்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளைப் பேச்சுக்கு எடுக்க வேண்டும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கிச் சென்ற இன்றைய அரசியல் யாப்பில் இத்தகைய நெருக்கடி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. ஆனால் யுத்தமாக மாற்றப்பட்ட தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில் குறிப்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான யோசனைகளை புலிகள் இயக்கம் அரசுக்கு முன்வைத்த மூன்று நாள்களில் ஜனாதிபதி எடுத்துள்ள அதிகார நடவடிக்கைகள் விசனம் தருவதாக அமைந்துள்ளன. இந் நடவடிக்கையானது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகள் பற்றி அரசாங்கமும் புலிகள் இயக்கமும் நடத்தவுள்ள பேச்சுக்களை முறியடிக்கும் உள்நோக்கத்துடனேயே எடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு முயற்சிகள் நாடப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட குழப்ப நிகழ்வுகளின் தொடர்ச்சி என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியும் அரசியல் நெருக்கடியும் அரசமைப்பை மையமாக வைத்தே நடத்தப்படுகின்றது. ஜனாதிபதி மூன்று அமைச்சர்களின் பதவிகளைப் பறித்தமையும், பிரதம நீதியரசர் மீது குற்றப்பிரேரணை கொண்டு வர முயல்கின்றமையும் ஆட்சி அதிகாரப் போட்டியில் அரசமைப்பினை தத்தமக்குச் சார்பாக வளைத்துக்கொள்ளும் முயற்சியேயாகும். இவை ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்கும் செயற்பாடுகளே. நாட்டின் நலன், மக்களின் நல்வாழ்வு பற்றி இருதரப்புக்கும் அக்கறை கிடையாது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. முக்கியமாக யுத்தக் கோரங்கள் தணிந்துள்ள சூழலைக் குலைத்து மீண்டும் அவற்றை அரங்கேற்ற நிற்கும் பேரினவாத யுத்த வெறியர்களுக்கு ஜனாதிபதியின் நடவடிக்கைகள் நல்ல தீனியாக அமைந்தும் வருகின்றன. அதனாலேயே ஜே.வி.பியினர் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை வரவேற்றும் உள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இறுதிச்சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள இன்றைய சூழலில், இருபது வருட யுத்தத்திற்குப் பின் போராட்ட களத்தில் நின்ற விடுதலைப் புலிகள் தமது சொந்த யோசனைகளை இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகளை வரைவுகளாக முன்வைத்திருக்கிறார்கள். இதனைக் குழப்புவது மீண்டும் யுத்தத்திற்கே வழிவகுக்கும். அவ்வாறு யுத்தத்தை மூட்டுவோர் இந்நாட்டின் வரலாற்றில் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகப் பாரிய துரோக மிழைத்தவர்களாகவே தம்மைப் பதிவு செய்து கொள்வார்கள் என்பதில் ஐயம் இருக்கமுடியாது - என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3 சிறுவர்களை புலிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைவதற்குச் சென்ற மூன்று சிறுவர்கள் நேற்றுமுன்தினம் யாழ் மாவட்ட அரசியல்துறையினரால் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவிகளான, 15 வயதுடைய இரு சிறுமிகளும் மற்றொரு சிறுவனும் கடந்த 3 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டனர். எனினும், புலிகள் 18 வயதுக்கு குறைந்தவர்களைத் தமது அமைப்பில் இணைத்துக்கொள்வதில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் மேற்படி மூவரையும் நேற்றுமுன்தினம் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலர்கள் பிரசன்னமாயிருந்தனர். யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். யாழ். மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் சுதாஸ் சிறுவர்களை அவர்களது பெற்றோரிடம் கையளித்தார். (ம-4)

## குடிக்கத் தண்ணீர் கேட்டவர்கள் கதிரைகளைத் திருடிச் சென்றனர்

தென்மராட்சி,நவ.9

வீட்டுக்கு வந்து குடிக்கத் தண்ணீர் கேட்டவர்கள் முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் கதிரைகளுடன் மாயமாகினர். சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-

வீதியில் நடந்து வந்தவர்கள் வீடொன்றிலிருந்த பெண்ணை அழைத்து குடிக்கத் தண்ணீர் தருமாறு கேட்டுள்ளனர். அந்தப் பெண் தண்ணீர் எடுத்துவர வீட்டினுள் சென்றபோது முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த நான்கு பிளாஸ்ரிக் கதிரைகளை எடுத்துக்கொண்டு மாயமாகி விட்டனர்.

அவர்கள் கதிரைகளை எடுத்துச் சென்றதை அயலவர்கள் கண்டபோதிலும், கதிரைகளை விற்பனை செய்பவர்கள் போல நடித்து தப்பிச் சென்றுவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கதிரைகள் அபகரிக்கப்பட்டதை ஒரு மணித்தியாலத்தின் பின்னரே உணர்ந்த பெண் கூக்குரலிட்ட போதிலும் கதிரைத் திருடர்கள் தப்பிவிட்டதாகக் கூறப்பட்டது. (ம-117)

## புத்தளத்தில் வீதி திருத்த ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு

புத்தளம்,நவ.9

புத்தளம் தொகுதியிலுள்ள பின்தங்கிய கிராமப் புறப்பகுதியிலுள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்து நவீனமயப்படுத்துவதற்கென போக்குவரத்து அமைச்சு சுமார் 5 கோடி ரூபாவை மேலதிக நிதியாக ஒதுக்கீடு செய்துள்ளதாக புத்தளம் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளர் எம்.ஐ.பி.ஹாபி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வருடாந்த நிதி ஒதுக்கீட்டை விடவும் இந்த நிதி மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற விவகார அமைச்சருமான ஏ.எச்.எம். அஸ்வரின் கோரிக்கையையடுத்து போக்குவரத்து அமைச்சு இத்தொகையை ஒதுக்கீடு செய்திருந்தது.

இதன் மூலம் புத்தளம் தொகுதியிலுள்ள பின்தங்கிய 30 கிராமங்களிலுள்ள சுமார் நூறு கிலோ மீற்றருக்கு மேற்பட்ட 25 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படும்.

புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய வீதிகள் குறித்து தற்போது விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் - வெகுவிரைவில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பமாகும் என்றும் - அமைப்பாளர் ஹாபி மேலும் தெரிவித்தார். (எ-186)

## ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து இன்றி அவதி

தென்மராட்சி,நவ.9

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் விசர்நாய்க்கடிக்கு பயன்படுத்தும் ஏ.ஆர்.வி. ஊசி மருந்து முடிவடைந்து விட்டது.

இதனால், இங்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லுமாறு பணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேசத்திற்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டதையடுத்து கடந்த மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் விசர்நாயினால் கடிபடுவோருக்கு ஆஸ்பத்திரியில் ஏ.ஆர்.வி. ஊசி மருந்து வழங்கப்பட்டு வந்தது.

இங்கு அனுப்பிவைக்கப்பட்ட ஊசி மருந்து முடிவடைந்துவிட்டதால், நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-117)

## முன்னோடி பரீட்சை

வலி.தெற்கு,நவ.9

தெல்லிப்பழை கல்விக்கோட்ட அதிபர்கள் சங்கத்தின் அனுசரணையுடன் இக்கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருப்பதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் அறிவித்துள்ளார். (எ-152)

## வலிகாம வலய பொதுப் பரீட்சை

வலி.தெற்கு,நவ.9

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கான வருடாந்த பொதுப் பரீட்சைகள் இம்மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

12 ஆம் திகதி 9 ஆம்தர மாணவர்களுக்கும், 14 ஆம் திகதி 10 ஆம் தர மாணவர்களுக்கும், 18 ஆம் திகதி 6 தொடக்கம் 8 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கும் பொதுப் பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெறும்.

3 ஆம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் வரையான வகுப்புகளுக்கு 19 ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பமாகும்.

இம்மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் அரச பாடசாலைகள் அனைத்தும் இவ்வருட இறுதித் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன. (எ-152)

## மட்டு.-அம்பாறை மாவட்டங்களில் கடும் மழை, வெள்ள அபாயம்!

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த இரு நாள்களாகப் பெய்துவரும் மழையினால் ஆயிரக் கணக்கான பெரும்போக வேளாண்மை வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை மட்டக்களப்பில் 28.7 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி சூரியகாந்தன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் வெள்ளி காலை 9 மணிவரையிலான காலப்பகுதியில் 44.3 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

தற்போது பெய்வது வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை அல்ல எனவும், வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகவே மழை பெய்துவருவதாகவும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதனால், கடல் கொந்தளிப்பாக இருப்பதுடன், கிழக்கு, தென்கிழக்கு கடற்கரைப் பிரதேசங்களில் மணிக்கு 10 தொடக்கம் 30 மைல் வேகத்தில் காற்று வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## காவலரணில் காணாமற்போன துப்பாக்கி 6 மாதங்களின்பின் மீட்பு!

வவுனியா,நவ.9

வவுனியா - மன்னார் வீதியிலுள்ள பொலீஸ் காவலரண் ஒன்றில் இருந்து ஆறுமாத காலத்துக்கு முன்னர் காணாமற்போன ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்று தற்போது மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் வவுனியா, மன்னார் வீதியிலுள்ள வீடு ஒன்றில் கொள்ளை அடிக்க முனைந்த இளைஞர் குழுவிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

மாதங்களுக்கு முன்னர் பொலீஸ் காவலரணில் இருந்து காணாமற்போன ரி-56 ரக துப்பாக்கியே அது என இனங்காணப்பட்டுள்ளது.

இத்துப்பாக்கி வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களில் வவுனியாவில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களில் இத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ஓ-3-164)



வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற கா.உருத்திரசிங்கத்தின் சேவையைப் பாராட்டி அண்மையில் நடத்தப்பட்ட பாராட்டுவிழாவில் உருத்திரசிங்கம் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: காரைநகர் செய்தியாளர்)

## ஜனாதிபதியின் நடவடிக்கைகளை பாராட்டுகிறது பிக்குமார் சங்கம்

கொழும்பு,நவ.9

ஜனாதிபதி சந்திரிகாவினால் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் அரசியல் நடவடிக்கைகளை அகில இலங்கை பிக்குமார் சங்கம் பாராட்டியிருக்கின்றது.

இதுகுறித்து மேற்படி சங்கத்தின் செயலாளர் ஹெநாயக சோமானந்த தேரர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே ஜனாதிபதிக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி தனது அதிகாரத்தை சரியான தருணத்தில் பயன்படுத்தியிருக்கிறார். நாட்டின் பாதுகாப்பு, இறைமை, ஐக்கியம் என்பனவற்றை பாதுகாப்பதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த நடவடிக்கைகளை பிக்குமார் சங்கம் பாராட்டுகின்றது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## இலங்கைச் சம்பவங்களால் பிரிட்டனுக்குப் பெரும் கவலை

இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் கூடுதலான கவலையளிக்கின்றன என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது. பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலக அமைச்சர் மைக் ஓபிரையன் இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது பிரிட்டனின் கவலையைத் தெரிவித்தார்.

அமைச்சர் மொறகொடவுடனான சந்திப்பையடுத்து பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்து, நாடாளுமன்றத்தை ஒத்திவைத்திருப்பது சமாதானப் பேச்சுக்கள் குறித்து பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கின்றது. சமாதான முயற்சிகளைத் தொடருவதிலுள்ள பிரதமர் ரணிலின் கடப்பாட்டை நாம் பலமாக ஆதரிக்கின்றோம். இம்முயற்சிகள் சர்வதேச நாடுகளின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன.

பிரதமர் நாடு திரும்பியதும் இன்றைய அரசியல் நெருக்கடியை ஜனாதிபதியும் அரசும் தீர்த்துக்கொள்ள முடியும் என்று நாம் நம்புகின்றோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

## வடக்கு - கிழக்குக்கு நெதர்லாந்து மேலும் உதவி

கொழும்பு,நவ.9

வடக்கு - கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டத்துக்கு 30 லட்சம் யூரோ உதவியை வழங்கும் ஒப்பந்தத்தில் நெதர்லாந்து தூதுவரும், கொள்கை அபிவிருத்தி, அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ரத்வத்தையும் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டனர்.

இதன்மூலம், வடக்கு - கிழக்கில் அரசு மேற்கொள்ளும் நிவாரண புனரமைப்புத் திட்டத்துக்கு நெதர்லாந்து தொடர்ந்து உதவியளித்து வருகிறது.

விவசாய கேந்திர நிலையங்களுக்கு, விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள் வாங்க நெதர்லாந்தின் இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும்.

# அன்றே காசு



வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவதற்கு
மிகவும் இலகுவான, குறைந்த செலவிலான,
அதிக பாதுகாப்பான முறை
டோ டு டோ எக்ஸ்பிரஸ்.
இதனால் வெளிநாட்டில் வேலைபார்க்கும்
பெரும்பான்மையோர் டோ டு டோ எக்ஸ்பிரஸ்
மூலம் பணம் அனுப்புகிறார்கள்.
இப்போது டோ டு டோ எக்ஸ்பிரஸ்
முன்னரை விட முன்னேறி,
அதி வேகத்துடன் செயற்படுகிறது.
வெளிநாட்டில் இருந்து அனுப்பும்
பணம் இப்போது மிகவும்
இரகசியமாக அன்றே கைவந்து
கிடைத்து விடுகிறது.

Door to Door EXPRESS

வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணம் அன்றே பாதுகாப்பாக கிடைக்கும்

இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி.

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கியில் அல்லது தலைமை அலுவலகத்தில் திலக் அழகியவன்ன 2445792 அல்லது உபாலி ரணசிங்க 2471616 அல்லது லக்சிறி விஜேரத்தின 2541933 உடன் தொடர்பு கொள்ளவும்.

# கவிதைக் கணங்கள்

## வந்ததும் வராததும்

பத்திரிகை முகத்தில் பலி என்று
தார்ப்பூச்சு
அச்சறுக்கையாக அடைபட்ட வேலிகளில்
பச்சோந்திச் செதில்கள்
பாம்புகளின் கோவணங்கள்.

விளக்குத் தலையோடும் குருட்டு விழியோடும்
வீதிகளில் அணிவகுத்த
தூக்கு மரங்களிலே தொடுத்த சணற்கயிற்றில்
நாக்குக் கிழிபட்ட தென்னங் குருத்துக்கள் ஆம்,
காரணம் தெரியாமல் காற்றூஞ்சல் ஆடுகின்ற
தோரணப் பிணங்கள்!

சில்வண்டும் ஷெல்துண்டும் சீழ்க்கை அடித்திருக்க
நள்ளிரவின் கற்பை நாய்கள் துகிலுரியும்.

அன்றாடம் எங்கள் அலைமடியில்
அனுமதிகள் இன்றி வருவதனால்
இடுப்பொடிந்து மேற்றிசையில்
குருதித்திட்டாகி கதிர் குலையும்
பின்னடக்கும்.
இரவு விசாரணையின் இம்சையினைத் தாங்காமல்
நிலவுமலங்கழிக்கும்
நெடில்கண்டு விண்ஈக்கள்
பல கூடி மொய்க்கும் பயங்கர ராத்திரிகள்.

இப்படியே எம்மை இருள் சப்பிய
பொழுதுகளை ஒப்பிப்பதென்றால்
ஒரு பிறவி போதாது!
எப்படியோ மீண்டுமொரு நல்லூர் கொடியேற்றம்
செப்படி வித்தையென்ற செல்லப்பர்
மொழி பொய்யாய்
இப்பொழுது ஆகாதா என்று எழும் ஏக்கம்
பொட்டல் வெளிகளிலே போட்ட
பனம்பாத்தித் திட்டுகளில் நாளை
அமைதிமழைத் தூவாணம்
தட்டுமென்று காற்றோ குடுகுடுப்பைக்காரன் போல்
விட்டு விட்டுப் ......பேசுகுது
என்றாலும் வியர்க்கிறது.

-ச.முகுந்தன்

## ஒரு பூ......!



காதல் மொட்டு
பூவானது
கண்ணீர் மொட்டு
கவிதையானது
கோடைச் சூரியன்
நெஞ்சுக்குள்
அக்கினிப் பிழம்பானது
மூச்சு தீயானது.....!
நிலவைத் தேடும் இதயம்
நிஜத்தைப் புரிந்தது......!
அவள் நேசிக்கத் தெரியாதவள்
அல்ல
என் நேசத்தைப்
புரியாதவள்...!
இருந்தும்,
ஒன்றை மட்டும்
செய்வாளா....?
என் புதை மேட்டுக்காவது
ஒரு பூ
சேர்ப்பாளா.......?

~சு.ஆனந்தன்

## தனிமை

கனக்கின்ற நெஞ்சத்தின் — சோகச்
சுமைகளைக் கொஞ்சம்
உடைத்துவிடுவது தனிமைதான்!

காதற் கனவுகளைக்
கண்ணீ ரோரத்தில்
கலக்கவிடுவது தனிமைதான்!

சாவின் முடிவிலே — சுடு
காட்டின் மத்தியிலே
சாம்பலாவதும் தனிமையிற்றான்!

செல்வி இ.கார்த்தினா

## வாழ்க நீ இசை வேந்தே!

கீர்த்தனைகள் உன் விரலசைவினால்
கீர்த்தி பெற்றன.
கர்நாடகத்தைக் கசக்கிப் பிழிந்து - எம்
காதுகளில் தேன்சுவையாக ஊற்றிய
உத்தமனே!

வயலின் உன்னை மேதையாக்கியதா?
இல்லை....... இல்லை.......
உனது விரல் நுனிகளினால்
வயலின்தான் மேன்மையடைந்தது.

உனது கரங்கள் மட்டுமல்ல
உடலும், முகமும், கண்களும் சேர்ந்தல்லவா
கானமழை பொழிந்தது.

வீணை மட்டுமல்ல, உனது விரல்கள், விழிகள்
அனைத்துமே இசையின் சுகத்தைப்
பறைசாற்றிய
விந்தை கண்டோம்.

ஓடும் மேகங்களும் உன் கீதத்தின் இனிமை கேட்டு
ஒருசில கணங்கள் அசைவற்று நின்றன.
இயற்கையும் உன் இசையின் இலயிப்பில்
ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றது.

சப்த சுரங்களினால் எம் சப்த நாடிகளும்
குருதியை சுமக்க ஒருகணம் மறுத்தன.

மருதமலை மாமணியாம் திருமுருகன்
உனது நாண்களில் நேரில் வந்து
நர்த்தனம் ஆடினன் அன்றோ!

மன்மத லீலைக்கு மகுடம் சூட்டி
எம் மனங்களைக் குளிரவைத்தாய் மன்னவா!

தேன் மணக்கும் தேவன் மலையை
எம் கண்களின் முன்னே கொணர்ந்து
உன் கரங்களால் நிருபணமாக்கினாய்!

புல்லாங் குழல் கொடுத்த மூங்கில்கள்
உனது புனிதக் கரங்களால்
புளகாங்கிதமடைந்தன.

கற்பக வல்லியின் பொற்பதங்களை
கனிவாக மீட்டி கவிமணியின்
காலடியில் காணிக்கையாக்கினாய்.

கிருஷ்ணா, முகுந்தா, முராரி என்று
கீதையின் நாயகனை ஏற்றிவைத்தாய்.

இசையுலகு இருக்கும் வரை
உன் இனிய ராகங்கள்
இங்கிதமாய் ஈழமாந்தர் செவிகளில்
ரீங்காரிக்கும்
வாழ்க நீ இசை வேந்தே!

(தீபாவளி தினத்தன்று குன்னக்குடி வைத்தியநாதன் நல்லூரில் வழங்கிய இசை மழையில் நனைந்த ஒரு ரசிகனின் கவிதை.)

-வதிரிவாசன்.

## பிரிவு



தாங்கையே......!
தொலையாத உன் நினைவுகளில்...
தொலைந்துபோன வசந்தங்களை
தினந் தேடுகின்றேன்.
தொடர்கதையானது
உன் பிரிவு மட்டுமல்ல...
தொலை தூரத்திலிருக்கும்
உன் பிரிவுந்தான்......

க.நாகேஸ்வரா

## விருந்து!





முற்றம் சுற்றி
காகம்
கரைந்து வட்டமிடுகிறது.....
இன்றைக்கு
விருந்து வைக்க சமைக்கணும்!
காகம்
முற்றத்தில் கரைந்தால்...
விருந்தாளி
வருவார் என்றுதான்
விளக்கம் சொல்வார்கள் முதியோர்!
விருந்தாளி
வரவில்லை...!
விருந்தாக்கியது காகம்....
கண்ணாய் வளர்த்த
கோழிக்குஞ்சை!

தமிழ்ப்பிரியன்.

## சந்தேகம் என்பது......

சில சமயங்களில்
ஏமாற்றப்படாமல் இருக்க
சிறந்த வழி!
பல சமயங்களில்
உறவுகளைத் துண்டித்து விடும்
கூரிய வாள்!
உண்மைகள் தூங்கும் வேளை
ஒட்டிக் கொள்ளும்
ஒட்டுண்ணி!
சில பொய்களை
மெய்களாய் நம்ப வைத்து
சில மெய்களை
பொய்களாய் நம்ப வைத்து
அல்லல் தரும் சாத்தான்!
அளவு கடந்த நேசிப்புக்கள்
அந்த நேசிப்புக்கள் விலகி விடுமோ
என்ற அச்சங்கள்
ஆகியவற்றை மூலங்களாக்கி
முளைவிடும் முட்செடி!
"கிடைக்கும் பாசங்கள்
முற்று முழுதாய் தனக்கு மட்டுமே"
என்பதில் சுயநலவாதியாய்
ஏங்கும் நெஞ்சங்களின்
பொறாமைத்தனமான
வெளிப்பாடு!

-கி.கிரிஜா

## புரிந்து கொள்வாயா?



காலங்கள் மாறுவதும்
காலத் தடங்கள் அழிவதும்
உண்மைதான் — ஆனால்
தேர்தல் கால சுவரொட்டியாய்
அலங்கோலமான அன்று — என்னை
தூஷித்தோர் மத்தியில்
துருவநட்சத்திரமாய் — என்னை
பூஜிக்க நினைத்த உன்னை
நான் யாசிப்பது
என்னை மறந்துவிடு.
உன்னை நான் வெறுப்பது — நான்
உன்னைக் காதலிப்பதால்தான்!

த.சுதர்சினி

## வாடகை வீடு தேவை

நெல்லியடி நகர், பருத்தித்துறை வீதியில் நகருக்கு அண்மித்த இடத்தில மூன்று அல்லது நான்கு அறை கொண்ட வசதியான வீடு ஒன்று அலுவலக உபயோகத்திற்காக உடன் தேவைப்படுகின்றது. கடிதம் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **க.துரைரத்தினம்,**
கந்தையா வீதி,
சாவகச்சேரி.
தொலைபேசி-0777-941119.
(34-21-15-18) (24534)



## புதிய கற்கைநெறிகள் ஆரம்பம்

ஒவ்வொன்றும் வீட்டிலிருந்து இலகுவாக கற்கக்கூடியதான தமிழ் மூலமான புத்தகங்களைக் கொண்ட பாடநெறிகள்.

**DIPLOMA IN SINHALA LANGUAGE**
**DIPLOMA IN GERMAN LANGUAGE**

காலம்: 6 மாதம், ஒரு பாடநெறிக்கான மொத்தக் கட்டணம்: ரூபா 1000/=
பாடநெறிகளின் முடிவில் பரீட்சையும் DIPLOMA சான்றிதழும் உண்டு.
தெரிவு செய்யும் பாடநெறி/பாடநெறிக்கான தொகையின் காசுக்கட்டளையை 'PSALMS TECHNOLOGIES' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவேண்டிய முகவரி:

Department of Foreign Languages,
Psalm Institute of Engineering and Technology
22 - 1/3, Galle Road, Dehiwala. (C/31087) (30-21-15-18)










உ
சிவமயம்

**நாரந்தனை கிழக்கு, நொச்சிபுலம் ஞானபைரவர் ஆலய**
## பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

**12.11.2003** புதன்கிழமை காலை 9.00மணியளவில் கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும்.
**13.11.2003** வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு யாகபூஜை. ஹோமம். ஸ்பரிசாகுதிகள் நடைபெறும். காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தலாம்.
**14.11.2003** வெள்ளி காலை 6.00 மணிமுதல் தூபி அபிஷேகம். காலை 8.16-9.45 மஹா கும்பாபிஷேகம் காலை 10.00 மணிக்கு மஹா அபிஷேகம். தீபாராதனை

ஆலய பிரதம குரு: சிவஸ்ரீ ந.கணேசராஜக் குருக்கள்
பிரதிஷ்டா பிரதம குரு: சிவாசார்ய குருமணி சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்

அன்பர்கள் வருக! திருவருள் பெறுக!!

- ஆலய தர்மகர்த்தா.

நொச்சிபுலம்,
நாரந்தனை கிழக்கு. (24497) (34-21-15-18)



## ஆத்மசாந்திக் கிரியைகளும் நன்றி நவிலலும்

### திருமதி பரமசாமிக்குருக்கள் ஆனந்தம்மாள்

தோற்றம்: 24.07.1924 மறைவு: 31.10.2003

திருமதி பரமசாமிக்குருக்கள் ஆனந்தம்மாள் அவர்கள் கடந்த 31.10.2003 வெள்ளிக்கிழமை நள்ளிரவு சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.11.2003 சனிக்கிழமை ஆவரங்காலில் நடைபெற்றன.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரக் குருக்கள் (உருத்திரபுரம் சிவன் கோவில் பிரதமகுரு) அவர்களின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற முத்து மோகனக்குருக்கள் (மாணிக்கப்பிள்ளையார் கோயில், நவக்கிரி) மற்றும் விஜயபாஸ்கர் (வைத்திலிங்கம் கொம்பனி, கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும் வரதராஜேஸ்வரக்குருக்கள் (மயிலணி, சுன்னாகம்), பாலசுப்பிரமணியக் குருக்கள் (கந்தசாமிகோவில், வவுனியா), தியாகராஜ சர்மா (ஆவரங்கால்) ஆகியோரின் மாமியாரும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), பாலச்சந்திரசர்மா (நல்லூர்), குமாரலஷ்மி, மீனாம்பிகை, கோகுலராணி, சரோஜினி ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (09.11.2003) ஞாயிறு தொடக்கம் 12-11-2003 வரை ஆவரங்காலில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- வே.தியாகராஜசர்மாவும், மக்களும், மருமக்களும்.

ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால். (24519) (25-21-18-15)


## 25குடும்பங்களுக்கு அராலி வடக்கில் மலசலகூடம்

வலி.மேற்கு,நவ.9

அராலி வடக்கு செட்டியார்மடத்தைச சேர்ந்த 25 குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள அமைச்சினால் வருமானம் குறைந்த மக்களுக்கென மேற்கொள்ளப்படும் உதவித்திட்டத்தின் கீழ் இவை அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (எ-175)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலி.மேற்கு,நவ.9

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (எ-175)

## சனசமூக நிலையம் புனரமைப்பு

வரணி,நவ.9

வரணி வடக்கில் உள்ள ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம் அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இடம்பெயர்வின்போது இந்த நிலையம் பலத்த சேதமடைந்தது. இதனால் சில வருடகாலம் இது இயங்காமலும் இருந்தது. அண்மையில் புதிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (எ-170)

## குளம் புனரமைப்பு

வலி.மேற்கு,நவ.9

அராலி வடக்கு கோணாவில் குளம கெயர் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்படுகின்றது.

மேற்படி குளத்தை புனரமைப்பதற்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை கெயர் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர். (எ-175)

## பண்ணாகத்தில் தையல் பயிற்சி

வலி.மேற்கு, நவ.9

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினரால் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பண்ணாகத்தில் தையல் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிக்கு சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம் ஆகிய இடங்களில் இருந்து யுவதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கல்வித்தகைமை உட்பட சகல விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பத்தினை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தியிடம் சமர்ப்பிக்குமாறு உதவிப் பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-175)

## சுற்றுலாப் பிரதேசங்கள் இனங்காணப்பட்டன

வலி.மேற்கு,நவ.9

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பறாளாய், திருவடிநிலை ஆகிய இடங்கள் சுற்றுலாப பயணிகளை கவரக்கூடிய பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

இதேவேளை -

மேற்படி பிரதேசங்களில் சுற்றுலா விடுதிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுலாத் துறையினருக்கு உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-175)


## சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்துவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விபரங்களுக்கு [illegible]77 871617 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை.



சுய தொழில்களுக்குத் தேவையான



ஐஸ்கிறீம், பொப கோர்ன், கெண்டிப் ளொஸ் போன்ற பல சுவையுணவு தயாரிப்பு இயந்திரங்களை வாங்குவதற்கு நாடுங்கள்.

**கெட்லங்கா லிமிட்டட்**
252, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பே. 7459734-6, பக்ஸ். 2459738



## பாராட்டு விழா

உ

எமது கிராமத்தின் சமூக சேவையாளர்
உயர்திரு.
**முருகுப்பிள்ளை தர்மலிங்கம்**
(ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தர்)



அவர்கள் 02.10.2003 அன்று சமாதான நீதிவானாக பதவியேற்றதையிட்டு நாம் பெருமகிழ்வடைவதோடு, அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*அவரைப் பாராட்டும் நிகழ்வு இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெறுகின்றது.* அனைவரையும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன கடனுதவி கூ.சங்கம்.
மேலைப்புலோலி ஆலடிப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபை.
சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்.

*தம்பசெட்டி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.* (24504) (34-15-18-21)



## ஓராண்டு நிறைவு
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

பிறப்பு 22 - 10 - 1932



இறப்பு 21 - 10 - 2002

அளவெட்டி, கேணிக்கரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர்
அமரர்
### சண்முகம்பிள்ளை கனகசபாபதிப்பிள்ளை

அவர்களின் ஆத்மசாந்திப் பூசையும், பிரார்த்தனையும், அன்னதானமும் இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை "வித்தகம" ஆச்சிரமம், பெரிய மாவடி, சாவகச்சேரியில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்தி நிகழவுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

க.கேதீஸ்வரன் குடும்பம். (மகன்)

*அளவெட்டி.* (C-30776) (34-21-15-19)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 02 - 06 - 1961



ஆண்டவன் அடியில் 19 - 11 - 2002

### திருமதி இராசலிங்கம் புஸ்பராணி (ராணி)

திதி: 09.11.2003

உன் நினைவை என் இதயம் மறந்திடாது ராணி
உன் இழப்பு எம் இதயத்தில் தீயாய் எரிகிறது
பாசத்துடன் உன் வரவை பார்த்திருந்து ஏமாந்தோம்
ஏங்க வைத்து நீங்கள் பிரிந்து ஓராண்டு ஆகுதம்மா!

இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், ப.தெ.வ.அ.கூ.ச. கொடிகாமம் பணியாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!*


உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்:


கணவர்: கி.இராசலிங்கம்
பிள்ளைகள்: கௌசலிகா, நகுலேஸ்வரன் (லண்டன்) கிருபாகரன், பிரியா, ரேணுகாந்
மருமகன்: சி.ஆனந்தகுமார்
பேரப்பிள்ளைகள்: கிருசாந்தினி, கிருசாந்தன், கிருறாஜ்
தந்தை: வே.சண்முகம்
தாய்: ச.இராசம்மா
சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள்.

தகவல்:
கணவர்: கி.இராசலிங்கம் குடும்பத்தினர்.

*தவசிகுளம், மிருசுவில்.* (24514) (25-15-18-21)

# குருநகருக்கு வந்த இராட்சத மீன்; சுட்டு கரைக்கு இழுத்து வரப்பட்டது!





யாழ்ப்பாணம்,நவ.9

கடலில் ஆள்களுக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது என்று கூறப்படும் இராட்சத மீன் ஒன்று நேற்று குடாக்கடலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு கரைக்கு இழுத்துவரப்பட்டது.

கடந்த சில தினங்களாக குருநகர் கடற்பரப்பில் காணப்பட்ட இந்த இராட்சத மீன் ஆழ்கடல் மீன் வகைகளைச் சேர்ந்தது என்றும் கூறப்படுகிறது.

'மச்சக்கண்ணி' (ஆள்விழுங்கி மீன்) என்று மீனவர்களால் அழைக்கப் படும் இந்த மீன் சுமார் 15 அடி நீளமானது. திறந்த, அகலமான வாயை உடையது.

சில தினங்களாக கடலில் இந்த மீனை அவதானித்த மீனவர்கள் அதனை உயிரோடு கரைக்குக் கட்டி இழுத்து வர முயன்றனர். ஆனால், பல படகுகளைப் பயன்படுத்தி இழுத்த போதும் மீனைக் கரைக்குக் கொண்டு வர முடியவில்லை. பின்னர் படையினரின் உதவியுடன் அதனைச் சுட்டுக் கொல்லத் தீர்மானித்தனர்.

நேற்றுக்காலை கடலில் வைத்து அது சுட்டுக்கொல்லப்பட்டது. உயிரிழந்த மீனை ஐந்து படகுகள் மூலம் கட்டிக் கரைக்கு இழுத்துவந்தனர். கடும் பிரயத்தனத்தின் மத்தியில் கரைக்குக்கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அந்த இராட்சத மீனைப் பார்ப்பதற்காக ஒரு பெரும் மக்கள் கூட்டம் குருநகர் கரையில் திரண்டது.

இத்தகைய இராட்சத மீன்கள் மிக நீண்டகாலத்துக்கு முன்னரே சில தடவைகள் குருநகர் கடலில் அகப்பட்டிருக்கின்றன. எனினும் இத்தகைய ஒரு மீன் அகப்பட்டிருப்பது சுமார் 30 வருடங்களுக்கு பின்னர் இதுவே முதற்றடவை என்று குருநகர் பகுதியைச் சேர்ந்த வயதுமுதிர்ந்த மீனவர் ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

உணவுக்குப் பயன்படுத்த முடியாதது என்று மீனவர்களால் கூறப்படும் இந்த மீன் பின்னர் தரையில் புதைக்கப்பட இருந்தது. 'உதயன்' படப் பிடிப்பாளர் அவ்விடத்துக்குச் சென்று மீனைப் பார்வையிட்டு எடுத்து வந்த படங்கள் மேலே பிரசுரமாகியுள்ளன. (ஜ-4-51)

## சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு நிதியுதவி

தென்மராட்சி,நவ.9

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் மற்றும் ஆசிரியர் சங்க லண்டன் கிளையினர் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கான காணி கொள்வனவுக்கென பத்து லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கல்லூரியின் பரிசில் நாள் விழாவில் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திடம் இந்தத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.

இன்று நடைபெறவுள்ள சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை பரிசில் நாள் விழாவில் இந்த நிதி பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்படுமென கல்லூரி அதிபர் கி.கைலைநாதன் தெரிவித்தார்.

## போசாக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.9

சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் நடத்தும் 'கடல் வாழ் உணவும் போசாக்கும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து வருகை தந்துள்ள செல்வி சி.வேல்விழி இந்தக் கருத்தரங்கை நடத்துவார்.

இதில் கலந்து கொண்டு பயன் பெறுவதுடன் பயனுள்ள கருத்துக்களையும் வழங்கி உதவுமாறு சிறுவர் கல்விக்கும் பால் நிலைய அபிவிருத்திக்குமான நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.இராஜேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-5)

## மாதர் அபிவிருத்தி சங்கம் அங்குரார்ப்பணம்

வரணி,நவ.9

மாசேரி கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் அண்மையில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர் சி.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் புதிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலனும இந்த வைபவத்தில் கலந்துகொண்டார். (எ-170)

# இரட்டை வேடம் போடுகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

## குற்றம் சுமத்துகின்றார் அமைச்சர் ஜயலத்

கொழும்பு,நவ.9

ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க தற்போது இரட்டை வேடம் ஏற்று நடிக்கிறார் என புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் சமாதானத்திற்காகத் தொடர்ந்து பாடுபடுவேன் என ஜனாதிபதி சந்திரிகா நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். ஆனால், சமாதான முயற்சிகளை எதிர்த்து கடந்த வெள்ளியன்று அவரது கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சி தேசப்பற்றாளரின் தேசிய இயக்கத்துடன் இணைந்து கொழும்பில் பேரணி ஒன்றை நடத்தியுள்ளது.

சமாதானத்தை எதிர்த்து நடத்தப்பட்ட இந்தப் பேரணிக்கு சமாதானத்தைத் தொடர விரும்பும் ஜனாதிபதியின் ஆசீர்வாதம் கிடைத்துள்ளது. இது ஜனாதிபதியின் இரட்டை வேடத்தைக் காட்டவில்லையா? அத்துடன் இந்தப் பேரணியின் முடிவில் இடம்பெற்ற கூட்டத்தில் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டத்தை முற்றாக நிராகரிப்பது மற்றும் பாதுகாப்புப் படைகளின் ஆற்றலை அதிகரிக்கச் செய்வது என்பனவே இந்தத் தீர்மானங்கள். ஆகும் ஜனாதிபதியின் கட்சியின் கலந்துகொண்ட - ஜனாதிபதியின் ஆசீர்வாதம் கிடைக்கப்பட்ட இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் இவ்வாறு இருக்கும் போது: ஜனாதிபதி எவ்வாறு சமாதான முயற்சிகளைத் தொடரப் போகிறார்?

விடுதலைப் புலிகளின் திட்டத்தை நிராகரித்துவிட்டு யாருடன் சமாதானம் குறித்துப் பேசப்போகிறார்? இந்



தக் கூட்டத்தில் சிங்கள மக்களிடையே இனவாத உணர்வுகளைத் தட்டி எழுப்பும் விதத்தில் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் தகவல் தொடர்புகள் அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து அரச செய்தியூடகங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவான விதத்திலேயே ஒலி, ஒளிபரப்புகளை மேற்கொள்ளுகின்றன. கடந்த வெள்ளியன்று தலைநகரில் ஒரு புறத்தில் ஜனசமுத்திரம் அலைமோத ரூபவாஹினி மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன தேசப்பற்றாளர்களின் தேசிய இயக்கத்தின் பேரணிக்கும் கூட்டத்திற்கும் முக்கிய இடமளித்துள்ளன.

அமைதியுடன் வாழும் வடக்கு-கிழக்கு மக்களிடையே ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்த ஜனாதிபதி முனைகிறார். அதே நேரம் மீண்டும் யுத்தம் உருவாகுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கவும் முனைகிறார். ஜனாதிபதியின் இந்த முயற்சிகளுக்கு நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சட்டவிரோத மின் இணைப்பை துண்டித்த ஊழியர் தாக்கப்பட்டார்

## பருத்தித்துறை செல்வாபுரத்தில் சம்பவம்

பருத்தித்துறைப் பகுதியில் சட்டவிரோத மின் இணைப்பைத் துண்டித்த மின்சார சபை ஊழியர் ஒருவர் விஷமிகளால் தாக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவு பருத்தித்துறை, செல்வாபுரம் பகுதியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் மின் இணைப்புக்களைப் பழுது பார்க்கும் பணி கடந்த வியாழனன்று இடம்பெற்றது. அப்போது சட்டவிரோத மின் இணைப்பு ஒன்றை அவதானித்த மின சார சபை ஊழியர் ஒருவர், அதனைத் துண்டித்துள்ளார்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதனால் ஆத்திரமடைந்த சட்டவிரோத மின் பாவனையாளர்கள் இந்த ஊழியரைத் தாக்கியதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, சட்டவிரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட மின்சார சபை ஊழியர்கள் பின்னடித்து வருவதாகவும் -

இதனையடுத்து இவ்வாறான பணிகளுக்கு பொலீஸாரின் ஒத்துழைப்பை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-9)

# ஆற்றல் வாய்ந்த மக்களையே தேசியத்தலைவர் விரும்புகிறார்

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.9

தேசத்தின், வளர்ச்சியிலும் அனைத்து விடயங்களிலும் இளைஞர், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த திறமையாளர்களாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தேசியத் தலைவருக்கு உள்ளது.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தேசத்திற்குத் தேவையான முக்கிய பணிகளான மரவேலை, கட்டட வேலை ஆகிய இரு தொழில்சார் பயிற்சிகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது.

தேசத்தை வளர்த்துச் செல்வதற்கும் கட்டியெழுப்புவதற்கும் இந்த இரு பணிகளும் முக்கியமானவை.

இன்று மேற்கொள்ளப்படும் பல்வேறு கட்டுமானப் பணிகளுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் இல்லை. இதனால் அரச திணைக்களங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்தப் பணியினை விரைவாகச் செய்து முடிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியுள்ளன.

வன்னிப்பகுதியில் தற்போது நிர்மாணிக்கப்படும் கட்டட அமைப்புப் பணிகளில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களே அதிகம் பணி புரிகின்றனர்.

எனவே, கருத்தரங்குகள் மூலம் இவ்வாறான தொழில்சார் கற்கை நெறிகளை மேற்கொண்டு எமது தேசத்தை வளமாக்குவதோடு, இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தையும் வளப்படுத்தமுடியும் - என்றார்.

தமிழீழ மாணவர் அமைப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கருத்தரங்கின் இறுதி நிகழ்வில் சிறப்புரைகளை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவசாமி, தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணி மைந்தன், கரைச்சி பிரதேச செயலர் பொன்நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றிய 60 மாணவர்களுக்கான சான்றிதழை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் வழங்கினார்.



விடுதலைப் புலிகளின் ரசிகன் இசைக்குழுவின் மீனிசை இசைத் தட்டு வெளியீட்டு விழா கடந்த வியாழனன்று மட்டக்களப்பு கரடியனாறு 'தேனகம்' விடுதியில் நடைபெற்றது.
இந்த விழாவில் கலந்துகொண்ட மூத்த தளபதியும் விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக்குழுவின் உறுப்பினருமான கேணல் கருணா அம்மான், மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் ஆகியோரை முதலாவது படத்திலும் - கேணல் கருணா அம்மான் இசைத்தட்டினை போராளி ஒருவரிடம் வழங்குவதையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் முறையே இரண்டாம், மூன்றாம் படங்களில் காணலாம்.

# மாடு திருடப்பட்ட வழக்கில் இளைஞர் ஒருவர் விளக்கமறியலில்

தென்மராட்சி,நவ.9

தோட்டத்தில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாட்டினைத் திருடி விற்றதாகக் கூறப்படும் நபரை சாவகச்சேரிப் பொலீஸார் கைது செய்து கடந்த வியாழனன்று நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அரசரத்தினம் சசிகுமார் என்னும் இந்த நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம திகதி மட்டுவில், கல்வம் சிவன் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பமிகரன் என்பவருக்குச் சொந்தமான மாட்டினை திருடியதாகக் கூறப்படும் இந்த நபர் தம்புரத்தினம் கமலநாதன் என்பவருக்கு மாட்டினை விற்றுவிட்டு பணத்துடன் தலைமறைவாகியிருந்ததாகக் கூறப்பட்டது.

மாடு காணாமற்போனதை அடுத்து அதனைத் தேடிச்சென்ற அதன் உரிமையாளர் குறித்த த.கமலநாதன் என்பவரின் வீட்டில் மாடு கட்டப்பட்டிருந்தது கண்டு சாவகச்சேரி பொலீஸில் முறையிட்டிருந்தார்.

இதனையடுத்து, அங்கு சென்ற சாவகச்சேரி பொலீஸார் மாட்டை வாங்கியதாகக் கூறப்படும் நபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்செய்தனர். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாட்டினைத் திருடியதாகக் கூறப்படும் நபரின் நடமாட்டத்தை அவதானித்த பொதுமக்கள் சாவகச்சேரி பொலீஸாருக்கு தகவல் கொடுத்தனர். அப்பகுதிக்கு விரைந்த சாவகச்சேரி பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொறுப்பு அதிகாரி எஸ்.ஏ.எரிக் ரோகித தலைமையிலான பொலீஸ் குழுவினர் மாடு திருடியதாகக் கூறப்படும் நபரை கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

# வலி.மேற்கில் 40 ஏக்கர் வயல் உவர் நிலமாக உருமாறியது

வலி.மேற்கு,நவ.9

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 40 ஏக்கர் வயல்நிலம் முற்றாக உவர்நிலமாக மாற்றம் அடைந்துள்ளது.

இதனால் பல வருடங்களாக பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நிலப்பரப்பை முற்றாகக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள அராலி, சுழிபுரம் ஆகிய வயல் நிலங்களே உவர் நிலமாக மாற்றம் அடைந்துள்ளது. அராலி, சுழிபுரம் ஆகிய இடங்களிலுள்ள வயல் நிலங்களுக்கு அண்மையில் கடல் காணப்படுகின்றது. இதனாலேயே இப்பகுதி வயல்நிலங்கள் சிறிது சிறிதாக உவர் நிலமாக மாற்றம் அடைந்து வருகின்றன. இதனால், இப்பகுதி விவசாயிகள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் கடல் நீரை உட்புகவிடாது தடுப்பு அணைகளை அமைக்குமாறு இப்பகுதி விவசாயிகள பல தடவை வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், தொல்புரம் கமநலசேவை நிலையத்தினர் உவர் நிலமாக மாற்றம் அடைந்துள்ள வயல நிலத்தை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு 'நியாப்' அமைப்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ-175)

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,நவ.9

உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர் மன்றத்தின் ஒளிவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு பி.றொசானந்தன் தலைமையில் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'கியூடெக்' நிறுவன உயிர்ப்பூட்டல் குழுக்களின் இணைப்பாளர் செபோசப்பாலாவும், சிறப்பு விருந்தினராக உரும்பிராய் பங்குத் தந்தை அருட்திரு. அனரனி பாலாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-10)

# நல்லூர் உட்பட 4 இடங்களில் விரைவில் கமக்காரர் வங்கிகள்

உடுவில், புத்தூர், நல்லூர், சாவகச்சேரி ஆகிய இடங்களில் முதல் கட்டமாகக் கமக்காரர் வங்கிகள் நிறுவப்படவுள்ளன.

இவ்வாறு நிறுவப்படும் வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு பல உதவிகள் வழங்கப்படவுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விவசாயத்தில் ஈடுபடும் அரச அலுவலர்களுக்கும் இந்த வங்கி மூலம் கடன் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்கள் உள்ள சகல இடங்களிலும் படிப்படியாகக் கமக்காரர் வங்கி ஆரம்பிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(எ-175)

# 'கல்வியியலாளன்' ஆய்வு நூல் நேற்று வெளியிடப்பட்டது



யாழ்ப்பாணம்,நவ.9

கல்வியியல் வெளியீட்டு நிறுவனத்தால் வெளியிடப்படும் கல்வியியலாளன் ஆய்வு நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியற்றுறை விரிவுரையாளர் கோ.கணேசலிங்கம தலைமையில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற இநநிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராஜா ஆகியோர் வழங்கினார்கள்.

நூலின் வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதனும், மதிப்பீட்டுரைகளை கலாநிதி வி.நித்தியானந்தன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் வழங்கினார்கள்.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் நூலின் முதற்பிரதியை யாழ். இந்துக்கல்லூரி உப அதிபர் எஸ்.தியாகலிங்கத்திற்கு வழங்கினார்.

இந்நூலுக்கான ஆக்கங்களை வரைந்தவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஜ-8)

# 4 கழகங்களுக்கு விதிக்கப்பட்ட தடை வீரர்கள் நன்மை கருதி நீக்கப்பட்டது

வலி.வடக்கு,நவ.9

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் நான்கிற்கு விதிக்கப்பட்ட தடை விளையாட்டு வீரர்களின் நன்மை கருதி நீக்கப்பட்டுள்ளது.

மயிலணி ஜனசக்தி விளையாட்டுக் கழகம், மயிலணி ஞானமுருகன் விளையாட்டுக் கழகம், மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் மற்றும் இணுவில் லம்போதரா விளையாட்டுக் கழகம் என்பவற்றுக்கு விதிக்கப்பட்ட தடையே நீக்கப்பட்டுள்ளது. இக்கழகங்களுக்கு இரண்டு வருடத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் இக்கழகங்கள் தவறு விடும் சந்தர்ப்பத்தில் கடும் தண்டனை விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# எல்லைப்படை வீரர்கள் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.9

தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவினர் எல்லைப்படை மாவீரர்கள் ஞாபகார்த்தமாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பார்.

இச்சுற்றுப்போட்டியில் 53 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

முதலாவது நாள் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

- வலிகாமம் சென். தோமஸ் வி.க. எதிர் வல்லை வி.க.
- வலிகாமம் கல்வி வலய வி.க. எதிர் புத்தூர் எவறெஸ்ட் வி.க.

(ம-3)

protein rich - cholesterol free
PROSOYA
சமபோஷ
புரோசோயா

❖ புரதம், விட்டமின்கள், கனியுப்புக்கள், சக்தி செறிந்த ஊட்டச்சத்து மிக்க உணவு

❖ சோயா, சோளம், சிவப்பரிசி, பாசிப்பயறுடன் 11 விட்டமின்களும் கனியுப்புக்களும் சேர்க்கப்பட்டு உற்பத்தியாக்கப்பட்ட சமபோஷ அனைவருக்கும் சிறந்தது. அதிலும் –

❖ வளரும் பிள்ளைகள்
கர்ப்பிணிப் பெண்கள்
பாலூட்டும் தாய்மாருக்கு விசேஷமான ஊட்டச்சத்து மிக்க உணவு.

❖ சமபோஷ பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் –
1. காலை ஆகாரமாக – பால், சீனி சேர்த்து உண்ணலாம்
2. சமபோஷ உருண்டை – தேங்காய், சீனி சேர்த்து உண்ணலாம்
3. ரொட்டி, பிட்டு தயாரிக்கும் போது கோதுமை மா அல்லது அரிசிமா –வுடன் சேர்த்து பயன்படுத்தலாம்.




200g 80g



Manufactured by :-
Plenty Foods (Pvt.) Ltd.
[(Member of the Link Holdings (Pvt) Ltd.]
(Successor to Plenty Canada)
No : 05, Independence Avenue,
Colombo 07

Marketed by :-
Plenty Foods (Pvt.) Ltd.
[(Member of the Link Holdings (Pvt) Ltd.]
No : 22, Polhengoda Rd. Colombo 05.
Tel: 2512523/4/7 Fax : 2512643
E-mail : plenty@sltnet.lk

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## மழைவெள்ளத்தால் பயணிகள் சிரமம்!

தெல்லிப்பழை,நவ.9

மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள பிரதான பஸ்தரிப்பு நிலையத்தின் முன்பாக தேங்கும் மழை நீரால் பஸ்ஸுக்காக அங்கு காத்து நிற்கும் பயணிகள், மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மல்லாகம் சந்தியில் எரிபொருள் விற்பனை நிலையம் அருகில் அமைந்துள்ள பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக வீதியோரமாகக் காணப்படும் பாரிய குழியில் மழை நேரங்களில் வெள்ளம் தேங்குவதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக வலி.வடக்கு பிரதேசசபை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

'பிரதான வீதியும், வீதியோரங்களும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்திற்கும் செயற்பாட்டிற்கும் உரியவை. இதை நாம் சீர்ப்படுத்த முடியாது.

'எனினும், இந்த விடயம் தொடர்பாக அவர்களுக்கு நாம் பல தடவைகள் அறிவித்துள்ளோம். இந்தக் பள்ளத்தில் தேங்கும் நீரை வடிகால மைப்புகள் இல்லாததால் அப்புறப்படுத்தவும் முடியாதுள்ளது' - என்றார். (எ-150)

## சமுர்த்திவங்கி கட்டடத்துக்கு நிதி கிடைத்தது

தெல்லிப்பழை,நவ.9

மல்லாகம், தெல்லிப்பழை பிரதேசங்களுக்கான சமுர்த்தி வங்கிக்கான புதிய சொந்தக் கட்டடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

மல்லாகத்தில் இயங்கிவரும் மல்லாகம் தெல்லிப்பழைப் பகுதிகளுக்கான சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கு சமுர்த்தி அதிகார சபை 8 லட்சம் ரூபாவை தற்போது வழங்கியுள்ளது. மேற்படி கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலக வளாகத்தினுள் அமையவிருக்கும் இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை வலி. வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா கடந்த புதன்கிழமை நட்டுவைத்தார். (எ-150)

## நேர்முகப் பரீட்சை

தெல்லிப்பழை,நவ.9

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.வடக்கு செயலகம் புதிய தட்டச்சு பயிற்சி நெறியொன்றை நடத்தவுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9.00 மணிமுதல் ஒரு மணிவரை மேற்படி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மல்லாகம் 7ஆம் கட்டையில் இயங்கிவரும் சங்கக் கிளையினால் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த தட்டச்சு பயிற்சி நெறியில் பயில விரும்புவோர் தமது சுய விபரங்களுடன் நேரடியாக இன்று மேற்படி அலுவலகத்திற்கு சமுகம் தரலாம் என சங்கச் செயலாளர் என். நாகேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-150)

## மயான மடம் பலத்த சேதம்

வளலாய்,நவ.9

வாதரவத்தை இந்து மயானத்தில் உள்ள மடம் கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக பலத்த சேதமடைந்துள்ளது.

மேற்படி மடத்தை புனரமைப்புச் செய்து தருமாறு பல தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்தும் இதுவரை எதுவித பயனும் கிட்டவில்லை என்றும் - சம்பந்தப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-178)

## சங்கானை. பிரதேச செயலராக மோகன் றாஸ் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.9

சங்கானை பிரதேச செயலராக சீ.ஏ.மோகன் றாஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களில் பணிப்பாளராகப் பணிபுரிந்த இவர், இறுதியில் மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார்.

இன்று யாழ்ப்பாணம் வருகைதரும் அவர் நாளை தமது கடமையினைப் பொறுப்பேற்றுக் கொள்வார் என திருகோணமலைத் தகவல் ஒன்று தெரிவித்தது. (எ)

---

## கண்ணீர் அஞ்சலி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட யா/ அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலய முன்னாள் ஆசிரியை திருமதி சு.இராசேஸ்வரி அவர்களின் அன்புக் கணவர்

**சோமசுந்தரம் சுந்தரலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யா/ அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலயம், அனலைதீவு.*

பிரிவால் துயருறும்: பாடசாலைச் சமூகத்தினர்.

(சி-31200) (31-13-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்

திரு.மா.சண்முகரத்தினம் அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி மாரிமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/வண். நாவலர் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(24548)(31-13-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் தலைமை சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றுகின்றவரான

**செல்வி லியோனிற்ரா**

அவர்களின் அன்புத் தந்தையார்

**ஞானப்பிரகாசம் லீனஸ்ரட்ணம்**

அவர்களின் மறைவு

எமக்கு மிகவும் வேதனையையும் கவலையையும் அளித்துள்ளது. அன்னாரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம், உதவி அரச அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.*

உதவி அரச அதிபரும், உத்தியோகத்தர்களும்.

(சி-31204) (31-13-18)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆலய பரிபாலன சபையின் பொருளாளர்

திரு. சரவணமுத்து ஆனந்தகுமார்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சின்னத்தங்கம் சரவணமுத்து**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
சங்கத்தானை கந்தசுவாமி கோயில்.

(24544) (34-13-18-31)

## மரண அறிவித்தல்

### முதலி வேலாயுதம்

மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முதலி வேலாயுதம் நேற்று (08.11.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முதலி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற தானியேல் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் பொன்னியத்தின் அன்புக் கணவரும் தவராசா (சுவிஸ்), தவமலர், ஜெயந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றெஜினா (சுவிஸ்), இராயேஸ்வரன் (லிகிதர், வலி.தெ.பி.செயலகம்), அன்ரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றென்ஸ், றென்சி, பிரதிகா, பிரவீன், ஜெறோன், டியோனிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை பிப 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இராயேஸ்வரன் (மருமகன்).

*மல்வம், உடுவில்.* (24543)(25-13-18-31)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 . 03 . 1946



மறைவு 10 . 10 . 2003

### அமரர் சுப்பிரமணியம் இராசேந்திரம்

மனிதரில் மாணிக்கமாகத் திகழ்ந்தீர்கள்
புனிதமாய் வாழ்ந்து இறையடி சேர்ந்தீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*காலகண்டர் கோயிலடி, மல்லாகம்.* (24551) (31-13-18)

- அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.





மூலிகைகளின் அரசன் என வர்ணிக்கப்படும்
**ரிஷிகாளான்**
கருத்தரங்குகளும் **இலவச** வைத்திய ஆலோசனைகளும்




நோய்த்தடுப்பிற்கும் நீண்ட ஆயுளுக்கும் மிக முக்கியமானது. கடினமான நோய்களான ஆஸ்துமா, ஒவ்வாமை, அதிகப்படியான கொழுப்பு, கொலஸ்ட்ரோல், ஈரல்நோய், சலரோகம், சோர்வு, உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம் இப்படிப்பட்ட ஆள்கொல்லி நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது.

மனித உடலில் அழிந்த கலன்களை அகற்றி புதிய கலன்களை உருவாக்கி தசைநார்களை சீராக இயங்கச் செய்து உடலில் உள்ள நோய்களை குணமாக்கி நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றது.

மூலிகைகளின் அரசன் என வர்ணிக்கப்படும் ரிஷிகாளான் கருத்தரங்குகளும் இலவச வைத்திய ஆலோசனைகளும் பின்வரும் நிலையங்களில் நடைபெறவிருக்கின்றன.

**09.11.2003** ஞாயிறு காலை 8.30 மணி யா/அமெரிக்கமிசன் தமிழ் கலவன் பாடசாலை (இலுப்பையடி மகாவித்தியாலயம்) மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**09.11.2003** ஞாயிறு காலை 10.30 மணி யா/சந்திர மௌலீச வித்தியாலயம் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

**09.11.2003** ஞாயிறு மாலை 3.00 மணி திரு.ஐ.இராமநாதன் இல்லம் மானிப்பாய் வீதி, கைதடி.

**10.11.2003** திங்கள் மாலை 4.00மணி யா/காசிநாதர் வித்தியாலயம் துன்னாலை, கரவெட்டி.

**11.11.2003** செவ்வாய் மாலை 5.00மணி திரு.கோ.பாலசிங்கம் இல்லம்,"கந்தகிரி" சுதுமலை வீதி, மானிப்பாய்.

**12.11.2003** புதன் மாலை 5.00 மணி திரு.S.றட்ணசிங்கம் இல்லம் சகி(யின்) தொலைத் தொடர்பு நிலையம் 73, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**12.11.2003** புதன் மாலை 7.00 மணி ராகவோ வைத்திய நிலையம் (கலையரங்கம் அருகில்) குருநகர், யாழ்ப்பாணம்.

**13.11.2003** வியாழன் மாலை 4.30 மணி யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம். சுன்னாகம்.

**14.11.2003** வெள்ளி மாலை 3.00 மணி வேலணை.

**15.11.2003** சனி காலை 10.00 மணி யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி.

**15.11.2003** சனி மாலை 4.00 மணி மக்கள் நலம் காக்கும் பிரிவு, தலைமைச் செயலகம், இருபாலைச் சந்தி, இருபாலை.

**15.11.2003** சனி மாலை 7.00 மணி இணுவில் பொது நூலகம், பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

DXN

**16.11.2003** ஞாயிறு காலை 10.00 மணி நாவலர் கலாசார மண்டபம் நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**16.11.2003** ஞாயிறு மாலை 4.00 மணி யா/வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை.

**MAGNUM INVESTMENTS (PVT) LTD.** 15, Stamboul Place, Colombo-3. Tel.575753, 074-723396, Fax : 370796
web: http:/www.magnumsl.com, e:mail:info@ magnumsl.com

# மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட

**உயர்திரு. துரைச்சாமி குருநாதசிவம்**

(உரிமையாளர், றோயல் இன்டஸ்ரீஸ் கொழும்பு, சிவா நறுமணப்பூங்கா, யாழ்ப்பாணம்)

அவர்கள் 06.11.2003 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். கடந்த காலங்களில் இவர் ஆற்றிய சேவைக்குக் கிடைத்த இப்பதவியையிட்டு பெரு மகிழ்ச்சியுடன் மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதோடு, இவரது பணி மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இவரும் இவரது குடும்பமும் மேலோங்க வாழ்த்தும்
திருமதி சபாரத்தினம் குடும்பம்.
90, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(24553) (31-13-17)


# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தினரால் 'காலசுரபி' இதழ் வெளியீட்டுக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

| பரிசு | சீட்டிலக்கம் | முகவரி | |
|---|---|---|---|
| 01 | 259 | வி.சசிகரன் மட்டக்களப்பு. | வழங்குவோர்- STP கணனி நிறுவனம் பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| 02 | 177 | ரி.மேரிநதி பழம் றோட், கந்தர்மடம். | வழங்குவோர்-பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா, கல்நிதி ப.புஷ்பரட்ணம் |
| 03 | 2009 | ஆர்.றஜித்தா கொடிகாமம். | வழங்குபவர்- விரிவுரையாளர் க.அருந்தவராஜா |

**ஆறுதல் பரிசுகள்**

2503 செ.மயூரன், 403 ரி.கார்த்திகா, 2060 K.T.T.C, PA II, 544 எம்.பிரபாகரன், 777 சுமங்களா, 51 இ.இந்துமதி, 1350 சுரேஷ், 1261 றூபிகா, 848 அ.திவ்யராஜ், 1685 XXX, 494 கிளிநொச்சி, 1696 XXX, 1321 கதிரேசு, 160 சண்முகேஸ்வரன், 757 ப.கஜன், 354 செல்வேந்திரன், 1997 சபேசன், 1752 தர்சினி, 1057 ம.றோகினி, 958 விஜிதா, விவசாய பீடம்.

*வழங்குவோர்*- சீமாட்டி புடைவையகத்தினர், பாரதி பதிப்பகத்தினர்.

பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாகக் கழகத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு :- பற்றுச் சீட்டுடன் வருதல் வேண்டும்.

அனைவரது ஒத்துழைப்பிற்கும் நன்றி.
வரலாற்றுக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம்.

விளம்பர அனுசரணை பட்டாபி படமாடம்,
இல:64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(24550) (30-13-17-31)


M.T.S. INTERNATIONAL TRAVELS & TOURS

விசேட சலுகைக் கட்டண விமான டிக்கட்டுகள்



லண்டன் விமானச் சீட்டுக்கட்டணம் 32,900/= மட்டுமே

கொழும்பு ⟷ பாங்கொக் 22,500/=
கொழும்பு ⟷ சிங்கப்பூர் 24,900/=
கொழும்பு ⟷ மலேசியா 24,900/=
கொழும்பு ⟷ பெங்களூர் 24,900/=
(Above Fares are Excluding Taxes)

- இந்தியாவின் சகல விமான நிலையங்களுக்கும் விசேட சலுகைகள் கட்டணத்தில் 3 நாள்களுக்கான இலவச தங்குமிட வசதியுடன் டிக்கட்டு செய்துதரப்படும்.
- தூர இடங்களில் இருந்து கொழும்பு நகருக்கு வரும் பிரயாணிகளுக்கு போக்குவரத்து ஒழுங்குகளும் இலவச தங்குமிட வசதிகளும் செய்துதரப்படும்.
- உலகின் சகல நாடுகளுக்கும் விசேட சலுகை விலையில் டிக்கட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- உலகின் சகல நாடுகளுக்கும் மலிவு விலையில் டிக்கட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்.

நவம்பர் 30ஆம் திகதி மட்டுமே இச்சலுகைக் கட்டணங்கள்.

தொடர்புகளுக்கு:- M.T.S. INTERNATIONAL,
No. 108A, SEA STREET, COLOMBO-11.
2591952 - 2391953, 2393064 - 2393065.
(சி-31205) (30-16-17-31)


# மரண அறிவித்தல்

## தம்பையா சேனாதிராசா

தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த தம்பையா சேனாதிராசா அவர்கள் நேற்று (08.11.2003) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மங்களேஸ்வரி அவர்களின் அருமைக் கணவரும் வசந்தகோகிலம், மகேந்திரராஜா (ஜெர்மனி), தருமராஜா (கனடா), சுலேந்திரராஜா (சிறுப்பிட்டி - திருப்பதி வீடியோ அன் (போட்டோ), காலஞ்சென்ற யோக ராஜா (சுதன்), வனித கோகிலம் (கொழும்பு), இரவீந்திரராசா (படவரைஞர், நியாப் NEIAP - பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி), நாகேந்திரராசா (மாவீரர் லெப். ஒப்டிலொன் - சுதன்), திருப்பதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம், இராசரத்தினம், அன்னபூரணம், இராசப்பா, தம்பிராசா மற்றும் செல்லையா (தொட்டிலடி), அப்புத்துரை (தொட்டிலடி), மனோன்மணி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை கிழக்கு.* (24552) (31-13-16)

தகவல்: குடும்பத்தினர்.

# மீனவர், விவசாயிகள் விவரம் திரட்டல்

வலி.மேற்கு,நவ.9

யாழ்.மாவட்டம் முழுவதும் விவசாயிகளினதும் மீனவர்களினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையினை யாழ். செயலக திட்டமிடல் பகுதியினர் மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாய, மீனவக் குடும்பங்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக சமுர்த்தி அலுவலர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று தகவல்களைத் திரட்டி இத்தகவல்களின் அடிப்படையில் இந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை சகல வழிகளிலும் மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக சகல குடும்பங்களின் வீடுகளுக்கும் சமுர்த்தி அலுவலர்கள் சென்று தகவல்களைத் திரட்டவுள்ளனர். (3-175)

# சமாதான உறவுப் பாலம்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ. மாவட்ட சர்வோதய சங்கங்களின் தொண்டர்கள் சமாதான உறவுப் பாலம் ஒன்றினை மேற்கொண்டு தென்னிலங்கை சென்றுள்ளனர்.

ஐம்பது சர்வோதய தொண்டர்கள் இரத்தினபுரியிலுள்ள உடவல என்ற சிங்களக் கிராமத்துக்கு நேற்றுமுன்தினம் பயணமாகியுள்ளனர்.

இவர்கள் மூன்று நாள்கள் அங்கு தங்கிநின்று உடவல கிராமத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவார்கள்.

மற்றும் அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட கலை கலாசார நிகழ்ச்சிகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3-7)


**கார் விற்பனைக்கு**

AC யுடன் கூடிய டீசல் இயந்திர 504-பேஜோ கார் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
102,3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(C-31207)(30)

**BRIGHTMAN**
நாவலர் வீதி, யாழ்நகர்.
A/L 2005
புவியியல்
செய்/முறைப்புவியியல் Mon. 4.00p.m.
பௌதிகப்புவியியல் Wed. 4.00p.m.
By: J.S. ஜெகன் B.A./Geo/Sp.
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(24535) (26)

**ராஜா** யாழ்ப்பாணம்
விக்ரம், சூர்யா, லைலா, சிம்ரன் நடித்த
பிதாமகன்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C-29904) (30)

**லிபேட்டி** அச்சுவேலி
சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த
திவான்



காட்சி நேரம்: 2.00, 7.00.
(C/30584) (1.2)
புதன் முதல்
பிரசாந்த், ஷாலினி நடித்த
பிரியாத வரம் வேண்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்
2ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த



திருமலை
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)

**நிஷாந்தினி**
விஜய், பூமிகா நடித்த
பத்ரி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
XXX


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி மா.மகாலட்சுமி அவர்களது அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி மாரிமுத்து**

அவர்களது மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

(24546) (30-13-16-31)


வடமாகாண அதிபர்கள் சங்கம் நடத்தும்
கல்வி அபிவிருத்தி நிதிக்கான

# 'கலைக் கோலங்கள்'

2003 - அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப்போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளின் மேடையேற்றம்

காலம் : இன்று (09.11.2003) ஞாயிறு பி.ப.2 மணி
இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்.

அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.
வடமாகாண அதிபர்கள் சங்கம்.
(சி-31202)(30-13-17-31)


# மரண அறிவித்தல்கள்

## ஞானப்பிரகாசம் லீனஸ் ரட்ணம்

(கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை)

கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும் 828/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமான ஞானப்பிரகாசம் லீனஸ் ரட்ணம் அவர்கள் 07.11.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரி பியாற்றிஸ் (ரதி) அவர்களின் அன்புக் கணவரும் லீற்ரன் (மலேஷியா), லீயோனிற்ரா (சமுர்த்தி முகாமையாளர், ஊர்காவற்றுறை), வேணிற்ரா (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி - ஆங்கிலம்- 2), பிறீமன் மெரிற்ரா (ஆசிரியை, சென். பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காஞ்சனா, சாந்தராஜன் ஆகியோரின் அருமை மாமனாரும் டினுசியா, டினோசன், கிறிஸ்ரிகா ஆகியோரின் அன்புத் தாத்தாவுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சுண்டுக்குழி புனித புவானியார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சியரதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*828/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (சி-31203) (30-13-16-31)

தகவல்: லியோனிற்ரா (மகள்).

## திருமதி அரியரெட்ணம் செல்வமணி

4ஆம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியரெட்ணம் செல்வமணி அவர்கள் நேற்று (08.11.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அரியரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா ஆகியோரின் அன்பு மகளும் ஜேர்ன்பிள்ளை - நாகம்மாவின் அன்பு மருமகளும் சமிந்தா, சஞ்சீவன், நஜிதா, விஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் குணபாலசிங்கம், ஞானமிர்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசந்திரன், சுகந்தினி (லண்டன்), கருணாநாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குணரெட்ணம், லில்லிமலர், கிறிஸ்ரின் அம்மா, ராஜேஸ்வரி, செல்வமணி, மேரிஜெசிந்தா, மேரி யோசப்பினா ஆகியோரின் மைத்துனியும், நாராயினியின் அன்புப் பேர்த்தியும் பிரபாகரன் (ஜேர்மனி), சுதாகரன், கோதமி, கௌதீபன் ஆகியோரின் பேர்ப்பமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 1.30 மணிக்கு மண்கும்பான் சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*4ஆம் வட்டாரம், மண்கும்பான்.* (24554) (31-13-16)

தகவல்: கணவர் - அரியரெட்ணம், மகன் - சஞ்சீவன்.

## திருமதி வன்னியசிங்கம் தனலெட்சுமி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் தனலெட்சுமி அவர்கள் நேற்று (08.11.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கத்தின் (கொழும்பு - யாழ் பிரபல வர்த்தகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரசாமி - செல்லம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கனகசபை - சின்னாச்சி தம்பதிகளின் அருமை மருமகளும், விக்னேஸ்வரன் (இலங்கை வங்கி, திருகோணமலை), பரமேஸ்வரன் (கனடா), கலாவதி சிவஞானலெட்சுமி, கலாநூரி நீதிமணி (ஆசிரியை, நயினாதீவு மகா வித்தியாலயம்), கதிரேசபிள்ளை (பிரான்ஸ்), பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், மணிமொழி (தட்டெழுத்தாளர், கடற்படைத் தளம், திருகோணமலை), ரவீந்திரநாதன் (லிகிதர், பிரதேச சபை, நயினாதீவு), ராஜேஸ்வரி, ராஜேஸ்வரன் (FORUT நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், இராமச்சந்திரன் மற்றும் பொன்னம்மா, சாந்தலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, தம்பிமுத்து, பூம்பாவை, சிவகாமசுந்தரி, காலஞ்சென்றவர்களான சுமலாம்பிகை, இலட்சுமணன், சரவணமுத்து ஆகியோரின் மைத்துனியும் தஷ்சாலினி, மாதினி, ஜனார்த்தன், சிந்துஜா, கிரிசாந், கார்த்திகா, ராஜ்குமார், ரவிக்குமார், கமங்கலை ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2003) திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நயினாதீவில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*6ஆம் வட்டாரம், நயினாதீவு* (24555) (31-16-17)

தகவல்: வ. விக்னேஸ்வரன் (மகன்) (இலங்கை வங்கி - திருகோணமலை).

# சகஜ சூழ்நிலையை உருவாக்கி பிரதமருடன் ஜனாதிபதி பேசவேண்டும்

## தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு,நவ.9

சமாதான முயற்சிகளில் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் சகஜமான சூழ்நிலையை உருவாக்கி, பிரதமருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று மாலை கொழும்பில் கூடி தற்போதைய அரசியல் நிலை குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள நல்லிணக்க தேசிய அரசில் தமிழ்க் கூட்டமைப்பு எந்தப் பங்கும் வகிக்கக்கூடாது என்று பெரும்பாலான உறுப்பினர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

நாடாளுமன்றத்தை மீளக்கூட்டி, மூன்று அமைச்சுக்களையும் அரசிடம் கையளித்து, சுமுகமான, சகஜமான சூழ்நிலை ஒன்றை உருவாக்க வேண்டும். அதன்பின் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையேயுள்ள முரண்பாடுகள் குறித்தும் பேசவேண்டும் என்றும் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சமாதான முயற்சிகளில் யுத்த நிறுத்தம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையுடன் தொடர்புடைய பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி வைத்திருப்பதன் மூலம் பிரதமர் எப்படி சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியும் எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை விளக்கி விரிவான அறிக்கை ஒன்றை இன்று வெளியிடவிருக்கின்றது.(ம-3)

# சர்வதேச வானொலியில் பிரதமரின் வரவேற்பு

## அஸ்வரின் வர்ணனை நேரடி அஞ்சல்

அமெரிக்க விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பு சர்வதேச வானொலியில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டது.

சர்வதேச தமிழ் வானொலி நிலையம், நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வருடன் தொடர்புகொண்டு கேட்டுக் கொண்டதற்கிணங்க, அமைச்சர் அஸ்வர் விமான நிலையத்திலிருந்து நிகழ்வுகளை நேரடியாக வர்ணித்தார். சுமார் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அமைச்சர் அஸ்வரின் வர்ணனை ஒலிபரப்பாகியது.

### கலாசார அலுவலர்களுக்கு!

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ். குடாநாட்டில் பணியாற்றும் அனைத்து கலாசார அலுவலர்களுக்குமான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அலுவலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் கேட்டுள்ளார். (ம)

# அபிவிருத்தி, புனர்வாழ்வு கழக பணிமனை தென்மராட்சியில்!

யாழ்ப்பாணம்,நவ.9

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளையான தென்மராட்சி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகப் பணிமனை நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் எஸ். வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி அருளானந்தம், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் பாக்கியராஜா, தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், சமாதான நீதிவான் இராசரட்ணம் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் க.ஜெயராஜ் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பெயர்ப்பலகை திரைநீக்கமும் அலுவலகத் திறப்பு வைபவமும் இடம்பெற்றன. இறுதியாக பலரது உரைகளும் இடம்பெற்றன. (ஜ-10)

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அழைப்புக் குறித்து தமது முன்னணியின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக அமைச்சர் லொக்கு பண்டார இச்செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

மக்களின் ஆணையைப் பெற்ற அரசு ஒன்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இயங்குகின்றது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வுகாண சட்டபூர்வமான அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு மக்கள் வழங்கியுள்ளனர்.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்ல, ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை உடன் கூட்ட வேண்டும்.

ஜனாதிபதி வசம் உள்ள பாதுகாப்பு, உள்துறை மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களை மீண்டும் அரசிடம் ஒப்படைக்கவேண்டும்.

அதன் பின்னரே தேசிய நல்லிணக்க அரசில் இணையுமாறு ஜனாதிபதி விடுத்துள்ள கோரிக்கை குறித்து நாம் பரிசீலனை செய்ய முடியும் - என்றார் அமைச்சர் லொக்கு பண்டார.

இதற்கிடையில் -

ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பாகப் பிரதமர் தனது கருத்தை ஓரிரு தினங்களில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன. (ம-3-6)

## புலிகளின் கரங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடக் கூடாது. ஏனென்றால் விடுதலைப் புலிகள் 20 வருடங்களாக செய்த போரின் காரணமாகத்தான் உலகில் உள்ள எல்லா வல்லரசுகளும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை அவதானித்துக்கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளுடன் பேசினால்தான் இலங்கையில் ஒரு தீர்வு ஏற்படும் என்று அவை சொல்லிக்கொண்டிருக்கின்றன.

"கைம்பெண்கள் எங்கிருந்தாலும் பிரச்சினைதான். அவர்கள் நல்ல காரியத்தைச் செய்யமாட்டார்கள்; செய்யவும் விடமாட்டார்கள்."

அதேநிலைதான் எமது அரசியலிலும் உள்ளது. அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை அதிகாரத்துக்கு கொண்டுவந்துவிடும் நோக்கத்துடன்தான் தற்போது செயற்பட்டு வருகின்றார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் எல்லாம் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூட்டமைப்புடன் தொடர்புகொண்டு தமது அரசாங்கத்தினைப் பலப்படுத்துவதற்கு ஆதரவு தரும்படி கேட்டார். அதன்படி ரணில் அரசுக்கு எமது ஆதரவினை வழங்கிவருகின்றோம்.

முன்னதாக, குருநகரிலுள்ள ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் உருவச் சிலைக்கு காலை 9.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மலர் மாலை அணிவித்தார். இந்த நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம-7)


**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடா நாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.



**CHEMISTRY**

**DIAS** B.Sc.(Hons) Sp.in.Chem.

★ அலகு ரீதியான

★ ஆண்டு ரீதியான

மீட்டல் வினா - விடை வகுப்புக்களின் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

104/4, Cross Road, Athiyady.


# புலிகள் மீதான தடையை நீக்க திராவிடப் பேரவை கோரிக்கை

புதுடில்லி,நவ.9

விடுதலைப் புலிகள் அமைப்பு மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு திராவிடப் பேரவை என்ற அமைப்பு இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புலிகள் மீதான தடையை நீக்கி இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவும் தனது பங்களிப்புக்களை வழங்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜர்களை இந்தியப் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் ஆகியோருக்கு அந்த அமைப்பின் செயலாளர் என்.நந்திவர்மன் அனுப்பிவைத்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைப் பிரச்சினைக்கு சமாதான வழிமுறைகள் மூலம் தீர்வு காணும் முயற்சிக்கு ஜனாதிபதி சந்திரிகா முட்டுக்கட்டை போடுகின்றார். அவர் அந்த நாட்டு நாடாளுமன்றத்தை முடக்கி வைத்து அமைச்சர்களின் அதிகாரங்களைப் பறித்திருப்பதன் மூலம் இது தெளிவாகியுள்ளது.

விடுதலைப் புலிகள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட முன்வந்துள்ளனர். இந்நிலையில், அந்த இயக்கத்தின் மீதான தடையை இந்தியா விலக்கிக்கொள்ளவேண்டும். பலஸ்தீன விடுதலை அமைப்புக்கு அளித்த அதே அந்தஸ்தை புலிகளுக்கும் அளிக்கவேண்டும்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களுடன் மத்திய அரசு ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளது. ஆர்.எஸ்.எஸ். இயக்கம் கூட தடைசெய்யப்பட்டிருந்தது. வடகிழக்கு மாகாணங்களில் உள்ள சில அமைப்புக்கள் கூடத் தடை செய்யப்பட்டுள்ளன. பின்னர் அந்தத் தடைகள் நீக்கப்பட்டன. அதே கொள்கையை விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் கடைப்பிடிப்பதில் தவறில்லை.

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் இந்தியா மத்தியஸ்தராகவும் பங்கேற்கவேண்டும் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. நோர்வே குழுவினர் ஒரு வாரம் இலங்கையில் தங்கியிருப்பர். (ம-3)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி தம்வசம் எடுத்த மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் அந்தந்த அமைச்சர்களிடம் கையளிக்கவேண்டும் எனக் கருதுகின்றனர்.

அவ்வாறு கையளிக்காத பட்சத்தில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதே சிறந்தது எனவும் அவர்கள் சிந்திப்பதாக அந்தப் பிரமுகர் மேலும் கூறினார். (ம-3)

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிப்பதற்கு நோர்வே நடவடிக்கைகள் எடுத்துள்ள நிலையில், தெற்கில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தெற்கு அரசியல் மாற்றங்கள், நெருக்கடிகள் குறித்து நோர்வே தரப்பு அவ்வப்போது விளக்கி வருகின்றது என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ம-3)

## ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்புக் குறித்து முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டக் குழுவே கூடி முடிவெடுக்கவேண்டும் என கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-6)

### தொழில்நுட்ப அலுவலர் நேர்முகப் பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலையில் உள்ள மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு அலுவலகத்தில் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும். இதில் 5 படவரைஞர்களும், 29 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். அவசர புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைத் துரிதமாகச் செய்து முடிக்கும் பொருட்டே இந்த ஆள்சேர்ப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு நியமனம் செய்யப்படுவர்.

ஏற்கனவே நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களே இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (எ-8-290)

### ஆஸ்பத்திரிக்கு தளபாடம்

தென்மராட்சி,நவ.9

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஐந்து அலுமாரிகளும் வெளிநோயாளர் பிரிவுக்கு ஏழு வாங்குகளும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆஸ்பத்திரி சிற்றூழியர்களுக்கான இவ் வருடத்திற்குரிய சீருடைத் துணிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### முன்னாள் கிராம சேவையாளர் நீதிமன்றில் ஆஜர்

மீசாலைப் பகுதி வளவொன்றினுள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த [illegible] ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டு உடைமைகளைச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் முன்னாள் கிராம அலுவலர் ஒருவரை பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

சின்னையா கந்தசாமி என்ற இந்த நபரை 25ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிவான் பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டார். (எ-117)


**வெஸ்டன் லொட்ஜ்**

**WESTERN LODGE**

270, செட்டியார் தெரு, கொழும்பு -11.

சகல வசதிகளுடன் சௌகரியமாகவும், பாதுகாப்பாகவும் தங்குவதற்கு குறைந்த செலவில் தலைநகரில் தங்குமிட வசதிக்கு தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி : 2433753, 2438570

தொலைநகல் : 2332557





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.